# பரிபூரண ஜீவன்
# PARIPOORANA JEEVAN

## ஆவியின் கனியோ

அன்பு

சந்தோஷம்

சமாதானம்

நீடிய பொறுமை

தயவு

நற்குணம்

விசுவாசம்

சாந்தம்

இச்சை அடக்கம்



கலாத்தியர் 5:22-23

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

July - August 2019
Volume : 59

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 4

## SFC சீஷத்துவ பயிற்சி முகாம்











## மதுராந்தகம் மண்டல ஆண்கள் ஐக்கிய முகாம்











ஆசிரியரிடமிருந்து........!

# கனிதரும் வாழ்வு



கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசுவை பின்பற்றும் ஒவ்வொருவரும் கனியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். கனி நிறைந்த வாழ்க்கை ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைக் காட்டுகிறது. நம்முடைய வாழ்க்கை ஆவியின் கனிகள் நிறைந்ததாக இருக்க வேண்டும். கனிகொடுத்தல் குறித்த வேதம் கூறும் சில காரியங்களை இங்கு உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

### 1. கனி கொடுத்தல் என்றால் என்ன?
### The PURPORT of Bearing Fruit

பரிசுத்த வேதாகமம் புதிய ஏற்பாட்டில் கனி கொடுத்தல் என்றால் என்ன என்பதற்கு சில பதில்களை நமக்குத் தருகிறது. **முதலாவது,** நமது நற்குணங்கள் கனிகளுக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5: 22, 23). மேலும் 2 பேதுரு 1:5-8 வசனங்களில் சில குணங்கள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய நற்குணங்கள் நமக்குள் காணப்படுமானால் நாம் கனி கொடுக்கிறோம் என்று அர்த்தம் (எபே.5:9). **இரண்டாவதாக,** நமது நற்கிரியைகள் கனி கொடுத்தலுக்கு ஒப்பாக இருக்கிறது.வேதம் சகலவித நற்கிரியைகளாகிய கனிகளைத் தந்து என்று கூறுகிறது (கொலோ. 1:10). “நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி நற்கிரியைகளைச் செய்யப் பழகட்டும்” என்று பவுல் கூறுகிறார் (தீத்து 3:14). **மூன்றாவதாக,** நற்செய்தி அறிவித்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது கனி தருவதாகும் (யோவான் 15:16; நீதி.11:30; ரோமர் 1:13). ஆகவே நற்குணங்கள், நற்கிரியைகள், நற்சாட்சி அறிவித்தல் ஆகிய காரியங்கள் நம்மில் காணப்படும்போதுதான் நாம் கனிதரும் கிறிஸ்தவர்களாக இருக்க முடியும்.

### 2. கனி கொடுத்தலின் நோக்கம் என்ன?
### The PURPOSE of Bearing Fruit



நாம் ஏன் கனி கொடுக்க வேண்டும் என்பதற்கு வேதாகமம் நமக்குத் தெளிவான பதில் கொடுக்கிறது. **முதலாவது,** கனி கொடுத்தல் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது. இயேசு சொன்னார், “நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்'' (யோவான் 15:8).

**இரண்டாவதாக,** நாம் கனி கொடுக்கும்படியாக தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம் (யோவான் 15:16). நாம் ஒரு மரத்தை நட்ட பின் அதில் கனியை எதிர்ப்பார்ப்பது போல தேவனும் நம்மில் கனியை எதிர்பார்க்கிறார் (லூக்கா 13 : 6-9). கனி கொடாவிட்டால் தேவனுடைய தண்டனை நம்மேல் வரும் (யோவான் 15:2,6) **மூன்றாவதாக,** ஒரு கிறிஸ்தவனை அடையாளம் கண்டுகொள்ள கனிகள் அவசியம். எந்த மரமும் கனியினால் அறியப்படுவதுபோல, ஒரு கிறிஸ்தவனும் தன்னுடைய கனியினால் தான் அறியப்படுவான் என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 7:20; 12:33) .

## 3. கனிகளை கொடுக்க என்ன செய்ய வேண்டும்?
## The PRECONDITIONS for Bearing Fruit

நாம் கனியுள்ளவர்களாய் மாற கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்ற வேண்டுமென்று வேதம் நமக்குப் போதிக்கிறது.

1. **கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்.** "ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" என இயேசு சொன்னார் (யோவான் 15:5). யோவான் 15:1-10 வசனங்களில் "நிலைத்திருத்தல்" என்ற வார்த்தை 10 முறை வருகிறது. நிலைத்திருத்தல் (Abiding) என்றால் தேவனோடு நெருங்கிய பிரியாத உறவு கொள்ளுதலாகும்.

2. **ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும்.** ஆவியின் கனி கொடுக்க ஆவியானவரின் உதவி மிகவும் அவசியம் (எபே. 5:18; கலா. 5:22,23). வேதம் கூறுகிறது, "ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமை அடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி.3:18).

3. **சுயத்திற்கு மரிக்க வேண்டும்.** வேதம் சொல்லுகிறது, "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவான் 12:24). தேவ ஆவியினால் நிரப்பப்பட்டுக் கனிகொடுக்க, மாம்சத்தை தினமும் சிலுவையில் அறைந்து சுயத்திற்கு அனுதினமும் சாகவேண்டும் (கலா.5:24).

4. **வேதத்தை தியானித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.** கர்த்தருடைய வேதத்தில் இரவும், பகலும் தியானமாய் இருக்கிற மனுஷன், நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைக் கொடுக்கும் மரத்தைப் போல் இருப்பான் என்று வேதம் கூறுகிறது (சங். 1: 2,3).

5. **சபை ஐக்கியம் வேண்டும்.** திருச்சபையிலுள்ள பரிசுத்தவான்களின் ஐக்கியமும், போதனையும் நாம் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி அடைவதற்கும், கனிதருவதற்கும் மிகுந்த அவசியம் (அப். 2: 42-44).

6. **தேவன் மேல் எப்பொழுதும் நம்பிக்கையும் விசுவாசமும் வேண்டும்.** கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் தப்பாமல் எப்பொழுதும் கனி கொடுக்கிற மரத்தைப் போலிருக்கிறான் என்று வேதம் கூறுகிறது (எரே.17: 8).

7. **தேவன் நம்மைப் பரிசுத்தமாக்க இடமளிக்க வேண்டும்.** தேவன் நம்மைத் தம்முடைய வார்த்தையின் மூலமாகவும் (எபி.4:12; யோவான்15:2), உபத்திரவங்களின் மூலமாகவும் (எபி.12:11; யோபு 23:10) நம்மைப் புடமிட்டுப் பரிசுத்தமாக்க விரும்புகிறார். நாம் இச்சமயங்களில் முறுமுறுக்காமல் அவரைத்

துதித்து அவர் தம்முடைய கிரியையை நம் வாழ்வில் நிறைவேற்ற இடமளிக்கும் போது நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும்.

### 4. கனி கொடுத்தலின் ஆசீர்வாதங்கள்
### The PROMISE for Bearing Fruit

நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து கனி கொடுக்கும் போது, அவருடைய உண்மை சீஷர்களாய் மாறுகிறோம் (யோவான் 15:8). நாம் கனியுள்ளவர்களாய் மாறும்போது தேவன் நமக்கு அநேக ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணுகிறார். அவைகளில் சிலவற்றை யோவான் 15-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். **முதலாவது**, நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலைத் தருகிறார். நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (15:7). **இரண்டாவதாக**, தேவன் தம்முடைய அளவற்ற ஆச்சரியமான அன்பை நம்மேல் காண்பித்து நம்மை ஆசீர்வதிக்கிறார் (யோவான் 15:9). **மூன்றாவதாக,** நிலையான மற்றும் நிறைவான சந்தோஷத்தை நமக்கு தருகிறார் (யோவான் 15 : 11).

### 5. கனி கொடுக்காவிட்டால் வரும் தண்டனை
### The PUNISHMENT for not Bearing Fruit

நல்ல கனி கொடாதிருக்கிற மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும் என்று இயேசு கூறினார் (மத்.3:10). ஒவ்வொரு நாளும் இயேசு நம்மில் கனியை எதிர்பார்க்கிறார் (லூக்கா 13:6). கனிகளை நாம் கொடாவிட்டால் தேவனுடைய தண்டனைக்குப் பாத்திரமாக மாறி விடுகிறோம் (லூக்கா13:7; யோவான் 15:2,6: மத்.21:19). உலகக் கவலை, சிற்றின்பங்கள், ஐசுவரியத்தின் மயக்கம் (லூக்கா 8:14), துன்மார்க்கரோடு உள்ள ஐக்கியம் (சங்.1:1-3) ஆகிய இவைகள் நம்மைக் கனியற்றவர்களாக மாற்றுகிறது. ஆகவே நாம் தேவனுடைய தண்டனைக்குத் தப்ப இவைகளிலிருந்து முற்றிலுமாக விடுதலை பெற்று, கிறிஸ்துவிலும் அவருடைய வசனத்திலும் ஆழமாக நிலைத்திருந்து கனிகொடுக்கத் தீர்மானிப்போம்! தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்! நம்மில் மகிமைப்படுவார்! அல்லேலூயா!.

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி

---

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றவர்களே சபை அங்கத்தினர்களாயிருந்தனர்

### அன்று

பெந்தெகொஸ்தே என்ற யூதப் பண்டிகையின் நாளில் பேதுரு எழும்பிப் பிரசங்கித்த போது தேவ பக்தியுள்ள யூதர்கள் (அப்.2:5) அந்தப் பிரசங்கத்தைக் கேட்டு இருதயத்தில் உணர்த்தப்பட்டவர்களாய், சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டனர்.

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்.2:38).

மனந்திரும்புங்கள் என்று பேதுரு தெளிவாய் பதில் கூறினார். கூட வந்திருந்தவர்கள் யெகோவா தேவனை ஆராதித்து வந்த பக்தியுள்ள யூதர்கள். ஆனாலும் அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்று பேதுரு கூறினார். இயேசுவுக்கு முன்னோடியாய் வந்த யோவான் ஸ்நானன் யூதருக்குக் கட்டளையிட்டது என்ன?

மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான் (மத்.3:2).

### இயேசுவின் பிரசங்கம் எப்படி ஆரம்பிக்கப்பட்டது?

அதுமுதல் இயேசு மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார் (மத்.4:17).

மனந்திரும்புதல் என்பது எல்லா மனிதருக்கும் அவசியம். ஏனெனில் எல்லோரும் பாவிகள். பிறமதத்தைச் சார்ந்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் பக்தியுள்ள கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும் யாவரும் பாவிகளே.

அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை ; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழி தப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள் (ரோமர் 3:10-12,13).

மனந்திரும்புதலைக் குறித்து நான் எழுதியுள்ள "உங்கள் சபையில் நீங்கள் பார்வையாளரா? பங்காளரா?" என்ற புத்தகத்திலிருந்து ஓர் பகுதியை இங்கே கொடுக்கிறேன்.

## யார் கிறிஸ்தவன்

### பாவத்தை விட்டு மனந்திரும்பினவன்

மனந்திரும்புதல் எல்லாருக்கும் உரியது. ஏனென்றால் எல்லாருமே பாவிகள்தான். நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பம் தரித்தாள் என்று தாவீது அரசன் கூறுகின்றார் (சங்.51:5). எல்லாரும் பாவிகள் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 3:10-12,13). எனவே எல்லாரும் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்பினவனே கிறிஸ்தவன்.

### நான் கிறிஸ்தவ பெற்றோருக்குப் பிறந்தவன் நான் பாவியா?

பிறப்பிலே கிறிஸ்தவன் ஒருவனுமேயில்லை. கிறிஸ்துவில் பிறந்தவனே

கிறிஸ்தவன். எங்கள் அப்பா கிறிஸ்தவர், அதனால் நான் இயேசுவுக்கு பேரப்பிள்ளை என்று கூறமுடியாது. இன்ஜினியருக்கு பிறந்ததினாலே நீங்கள் இன்ஜினியரல்ல. டாக்டருக்கு பிறந்ததினாலே நீங்கள் டாக்டரல்ல, எங்க அப்பா டாக்டர், அதனாலே நான் அறுவை சிகிச்சை செய்யப் போகிறேன் என்று சொல்லி கத்தியுடன் புறப்பட்டால் ஊரே அலறி ஓடிவிடும்.

யோவான் ஸ்நானன், இயேசு பின்பு பேதுரு யாவருமே மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்தது பக்தியுள்ள யூதருக்குத் தான் என்பதை மறந்துவிடக்கூடாது. அவர்களும் மனந்திரும்ப வேண்டியிருந்தது. கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும் நாம் பாவிகளாகவே பிறக்கிறோம். எனவே மனந்திரும்ப வேண்டியது மிக அவசியம்.

**கிறிஸ்தவ பெயருள்ள யாவரும் கிறிஸ்தவரா?**

அப்படி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். ஆனால் அப்படி இல்லையே. எங்க தெருவிலே இரண்டு நாய்கள் இருந்தது. இரண்டிற்கும் கிறிஸ்தவப் பெயர்கள்தான். ஒன்று டாமி. அதாவது தோமா (இந்தியாவிற்கு வந்த அப்போஸ்தலன் நிலையைப் பார்த்தீர்களா?). அடுத்தது ஜிம்மி, அதாவது ஜேம்ஸ் அல்லது யாக்கோபு. இவைகள் கிறிஸ்தவ பெயருடையதாக இருப்பதால் கிறிஸ்தவர்களா? நாம் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தது ஒரு பெரிய சிலாக்கியம்தான். ஆனால் அது போதாதே. கிறிஸ்துவுக்குள் பிறக்க வேண்டுமே.

நான் ஒரு தடவை நியூசிலாந்து போயிருந்தபோது ஒரு வெள்ளைக்கார அம்மா உன்னை அடிக்கடி நினைக்கும்படி உன் பெயரை எங்கள் வீட்டிலுள்ள ஒருவருக்கு வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். நானும் அந்த நபரைப் பார்க்க ஆவலுடன் இருந்தேன். வீட்டிற்கு பின்னே என்னைக் கூட்டிச் சென்று அந்த நபரைக் காட்டினார்கள். அது ஒரு மாடு. அதனாலே அது பிரசங்கி மாடு ஆக முடியுமா?

அநேக இடங்களில் கள்ளுக்கடை, சாராயக்கடை வைத்திருக்கின்றவர்களின் பெயர்களை வாசிக்கின்றோம். ஆபிரகாம், ஜோசப், டேவிட் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களெல்லாம் இந்த தொழில் ஆரம்பித்துவிட்டார்களே. ஒரு தடவை மதுரை ஜெயிலிலிருந்து ஓடிவிட்டவரைப் பற்றி பத்திரிக்கையில் வாசித்தேன். அவர் பெயர் ஏசுதாஸ்! பிக்பாக்கெட் அடித்தவன் பெயர் பவுல்ராஜ். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். பெயர் ஒருவனையும் கிறிஸ்தவனாக்காது.

**நான் ஆலயத்திற்கு ஒழுங்காகப் போகிறேனே!**

மிக நல்லது. ஆனால் ஆலயத்திற்கு ஒழுங்காக போனாலும் உங்கள் பாவங்களைவிட்டு விலகவில்லையே. பரிசுத்த ஸ்தலத்துக்குப் போக்கு வரவு செய்த துன்மார்க்கர் என்று வேதம் கூறுகிறது (பிர.8:10). ஆலயத்திற்குப் போகின்ற காரியங்களைத் தவிர உங்களுக்கும், மற்ற மக்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றதா? கெட்ட பேச்சுக்கள், தீய செயல்கள், பழக்கவழக்கங்கள் உங்களுக்குள் இருக்கின்றதா? உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளது என்ற நம்பிக்கை இருக்கின்றதா? இன்று மரித்தாலும் பரலோகம் போவேன் என்ற நிச்சயம் உங்களுக்கு இருக்கின்றதா? உங்களுக்குள் இயேசு வாழ்கின்றாரா?

**நான் ஒரு சன்மார்க்கன் அது போதாதா?**

சன்மார்க்க வாழ்க்கை நல்லது. ஆனால் கர்த்தர் சன்மார்க்கனையும், துன்மார்க்கனையும் நியாயந்தீர்ப்பார் என்று வேதம் கூறுகிறது (பிரசங்கி 3:17). கிறிஸ்து இல்லாத சன்மார்க்க வாழ்க்கையை கடவுளை நம்பாத நாஸ்திகன்கூட வாழ்ந்து காட்ட முடியும். விக்கிரக வணக்கதிலுள்ள எத்தனையோ பேர் நல்ல சன்மார்க்க வாழ்க்கை வாழ்கின்றார்கள்.

நமது பாவங்களைப் போக்க சன்மார்க்க வாழ்க்கை உதவாது. சன்மார்க்க வாழ்க்கை போதுமென்றிருந்தால் இயேசு இந்த உலகத்திற்கு வந்து தமது இரத்தத்தை சிந்த வேண்டிய அவசியமே இருந்திருக்காது. எல்லாரும் நல்ல சன்மார்க்க வாழ்க்கை வாழுங்கள் என்று சொல்லி இருப்பார். துன்மார்க்கர்களும் பாவிகளே சன்மார்க்கர்களும் பாவிகளே.

## ஆவிக்குரிய சபைக்குப் போகிறேனே!

தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் கூடினபோது சாத்தானும் அவர்கள் நடுவே வந்து நின்றான் என்று யோபுவின் புத்தகத்தில் காண்கிறோம் (யோபு 1:6;2:1). சாத்தான் ஓரத்திலே ஒரு மூலையிலே நிற்கவில்லை. நடுவிலே வந்து நின்றான். பிந்தி வந்தால்தான் ஓரத்திலே நிற்க வேண்டும். விசுவாசிகள் பிந்தி வந்தாலும் சாத்தான் நேரத்துடன் கூட்டத்திற்கு வந்துவிடுவான். அதனாலே அவனுக்கு நடுவிலே இடம் கிடைக்கிறது. சாத்தான் பரிசுத்தவானா? எந்த ஆவிக்குரிய சபைக்குப் போனாலும் மனந்திரும்புதல் உங்களுக்கு நிச்சயம் தேவை.

## நான் போதகர் பிள்ளை, போதாதா?

போதகர் பிள்ளையாக இருப்பதால் எந்த சலுகையும் பரலோகத்தில் கிடையாது. நானும் ஒரு போதகன்தான். எனக்கும் பிள்ளைகள் உண்டு. அவர்களும் மனந்திரும்பினால் தான் பரலோகம் போக முடியும். என் பிள்ளைகள் மனந்திரும்பி இயேசுவின் பிள்ளைகளாக இருக்கின்றார்கள். கர்த்தருக்கே மகிமை. நிக்கொதேமு என்ற யூதப் போதகர் இயேசுவிடம் வந்தபோது, இயேசு அவருக்கும் மனந்திரும்புதலில்லாமல் பரலோகம் போக முடியாது என்று உறுதியாய் சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? (யோவான் 3:1-10). போதகரானாலும் மனந்திரும்ப வேண்டும்.

**மனந்திரும்புங்கள் :** மனம் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியும். திரும்புதல் என்றாலும் தெரியும். செய்த பாவத்தையே திரும்ப திரும்ப செய்துவிட்டு, வாரந்தோறும் அறிக்கை பண்ணினாலும் மறுபடியும் அதையே செய்துகொண்டே இருப்பதல்ல மனந்திரும்புதல், உங்கள் பாவ வாழ்க்கையை விட்டு திரும்பி இயேசுவை நோக்கி நடத்தல் மனந்திரும்புதல். நீங்கள் உங்களை பாவி என்று ஒத்துக்கொள்ளுங்கள். உங்கள் பாவங்களுக்காக உண்மையாக வருத்தப்படுங்கள்.

இயேசுவே நீரே மெய்யான தேவன், என் உள்ளத்தில் வாரும். என் பாவங்களை உமது திரு இரத்தத்தால் கழுவும் என்று கேளுங்கள். பழைய பாவங்களை செய்யமாட்டேன் என்று தீர்மானம் பண்ணி, அதிலே உறுதியாயிருங்கள். இயேசுவும் உங்களுக்கு உதவி செய்வார். பழைய போக்கு சரியில்லை என்று உணர்ந்து பாவ வாழ்க்கையை விட்டு இப்போது பரிசுத்த வாழ்க்கைக்கு திரும்பிவிட்டீர்கள். இதுதான் மனந்திரும்புதல். இதுதான் மறுபடியும் பிறத்தல், இதுதான் இரட்சிப்பு.

ஒரு பாவி தேவனுடைய பிள்ளையாவதற்கு சில நிமிடங்கள் போதும். இப்படி நீங்கள் மனந்திரும்பிய உடன் உங்கள் பெயர் பரலோகத்தில் ஜீவபுத்தகத்தில் எழுதப்படும். நீங்கள் பரலோகத்திற்குரியவர் என்று அங்கேயே பதிவாகிவிடும். நீங்கள் தேவனுடைய பிள்ளையாகிவிட்டீர்கள் என்று பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஆவியுடனே (உள்ளத்திலே) சாட்சி கொடுப்பார் (ரோமர் 8:16).

## இன்று

கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் கோடிக்கணக்கானோர் இன்று மெய் கிறிஸ்தவர்களாய் வாழவில்லை. மனந்திரும்புதல் என்றால் என்ன அவர்களுக்குத் தெரியவில்லை. உலகிலுள்ள சகல பாவங்களும் இவர்களுக்குள் இருக்கின்றன. சுபாவத்திலோ, நடத்தையிலோ, பழக்க வழக்கங்களிலோ மாற்றமில்லை. பிற மதங்களை சேர்ந்தவர்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசமில்லை.

அநேக கிறிஸ்தவர்கள் பிற மதத்தினரைவிட ஒழுக்கம் குறைந்தவர்களாக, தீய பழக்கவழக்கமுடையவர்களாக இருக்கின்றனர் என்பது அதிக வேதனையைக் கொடுக்கும் உண்மை.

இயேசு கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்தையும், நற்பண்புகளையும் வெளிப்படுத்தும் வாழ்க்கை வாழாததால் இவர்களினிமித்தம் கிறிஸ்துவ மார்க்கம் தூஷிக்கப்படுகிறது. இயேசு மனிதனை எவ்விதம் மாற்றுகிறார் என்பதை வெளிப்படுத்தும் வாழ்க்கை வாழ இவர்கள் தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து மனந்திரும்ப ஜெபிப்போமாக.

**அன்று மனந்திரும்பினவர்களே ஞானஸ்நானம் பெற்றனர்**

இன்று குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது. குழந்தை ஞானஸ்நானம் வேதத்தில் சொல்லப்படவில்லை.

**பரிசுத்த வேதாகமத்தில் யாருக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது?**

1. **மனந்திரும்பினவர்கள்:** பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப். 2:38).

2. **வசனத்தை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள்:** அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் (அப். 2:41).

3. **இயேசுவை விசுவாசித்தவர்கள்:** தேவனுடைய ராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 8:12).

4. **இயேசு கிறிஸ்துவை முழு இருதயத்தோடு ஏற்றுக்கொண்டவர்கள் :** இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடையென்ன என்றான். அதற்கு பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் : இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (அப். 8:36-48).

5. **பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் :** அப்பொழுது பேதுரு : நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டான் (அப். 10:47,48).

6. **கர்த்தருடைய வசனத்தால் போதிக்கப்பட்டவர்கள் :** அதற்கு அவர்கள் : கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும், உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தான் (அப். 16:31,32).

7. **மனந்திரும்புதலுக்கென்று ஞானஸ்நானம் பெற்றவர்களும் மறுபடியும் பெற்றனர் :** அப்பொழுது அவன் : அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல், யோவான் தனக்குப் பின்வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் கேட்டபோது, அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 19:3-5).

8. **தங்கள் பாவங்களை அறிக்கையிட்டார்கள் :** தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள் (மத். 3:6).

9. **இயேசுவின் சீஷரானவர்கள் :** ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து (மத். 28:19).

10. **இயேசுவில் விசுவாசமுள்ளவன் :** விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:16).



வேதாகமத்தில் மிகச்சிறிய புத்தகங்கள்

# யூதா எழுதின பொதுவான நிருபம்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

வேதாகமத்திலுள்ள ஒரே ஒரு அதிகாரத்தையுடைய யூதா நிருபத்தைப் பற்றி இவ்விதழில் காண்போம்.

## யூதா நிருபத்தின் ஆசிரியர்

இந்நிருபத்தை எழுதியவர் யூதா. தன்னை யாக்கோபின் சகோதரன் என அறிமுகப்படுத்திக்கொள்கிறார். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஒன்றுவிட்ட சகோதரர் நால்வருள் (யாக்கோபு, யோசேப்பு, யூதா, சீமோன்) இவரும் ஒருவர். (மாற்கு 6:3). இவர்கள் நால்வரும் ஆதி சபையில் நன்கு அறியப்பட்டவர் களாயிருந்தனர்.

## திசைதிரும்பிய யூதாவின் பேனா

பக்திவிருத்திக்கேதுவான இரட்சிப்பைக் குறித்து ஒரு தியான நிருபமாக எழுத ஆரம்பித்த யூதா, காலத்தின் கட்டாயம் கருதி, விசுவாசிகளைத் திசைதிருப்பும் விசுவாசத் துரோகச் செயலில் ஈடுபட்டிருந்த ஒரு கும்பலுக்கு எதிராகத் தங்களைத் தற்காத்துக்கொள்ளும்படி விசுவாசிகளுக்கு ஆலோசனை சொல்லி எழுதப்பட்ட நிருபம் இதுவாகும்.

## யார் இந்த கள்ளப்போதகர்களான விசுவாசத் துரோகிகள்?
## சரித்திரப் பின்னணியம்

1. வேதப் பிரமாணங்களைக் கைக்கொள்ளவேண்டுவதில்லை : “கிருபை மட்டுமே” என்பது இவர்கள் கொள்கையின் பிரதானமானதாகும். இதைச்செய், இதைச் செய்யாதே என வேதம் கற்பிக்கும் எதற்கும் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை; இது கிருபையின் காலமாதலால், இரட்சிப்பு ஆவிக்குரியது; இது கிருபையினால் உண்டானது. இது யாராலும் சம்பாதிக்கப்பட்டதல்ல. எனவே கிருபையின் காலத்தில் வாழும் நாம் பொதுவான ஒழுக்க விதிகளையும் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்னும் எல்லை கடந்த திரிபுக்கொள்கையை இவர்கள் விசுவாசிகளுக்குள் பரப்பினர். பாவம் செய்யலாம்; நியாயத்தீர்ப்பு நம்மேல் வராது. சரியான நோக்கத்துடனிருக்கையில் நாம் செய்யும் எந்தப்பாவமும் நமது சரீரத்தைக் கறைப்படுத்தாது என்று போதித்தனர். தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கு ஏதுவாய் புரட்டினர்.
2. இவர்கள் சிருஷ்டிக் கர்த்தராகிய பிதாவாகிய தேவனை மறுதலித்தார்கள். அன்புள்ள தேவனின் கிருபையை திரித்துப் போதித்தனர்.
3. மாம்சத்தில் வெளிப்பட்ட குமாரனாகிய கிறிஸ்துவின் தெய்வீகத்தை முற்றிலும் மறுதலித்தனர். கிறிஸ்துவின் இரத்தத்தினாலுண்டாகும் பாவ மன்னிப்பையும், கிறிஸ்து பரமேறிச்சென்று வாக்குத்தத்தம் செய்து இவ்வுலகுக்கு அனுப்பிய பரிசுத்த ஆவியானவரையும் நம்பவில்லை.
4. தேவதூதர்களை நம்பவில்லை. பரலோக அரசாங்கத்தை அங்கீகரிக்கவில்லை,

தூதர்களின் பரலோக ஆராதனையை நிராகரித்தனர்; இயேசு தேவதூதர்களுடன் மீண்டும் வருவார் என்பதைக் கட்டுக்கதை என்றனர். தமது சிருஷ்டிப்பின் மகுடமாகிய மானிடரைக் காக்கும்படி தூதர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர் என்பதையும் இவர்கள் புறந்தள்ளினார்கள்.

## ஒப்புவமை

மேகங்களுக்கும். மரங்களுக்கும், கடலலைகளுக்கும், நட்சத்திரங்களுக்கும் இவர்கள் ஒப்பிடப்பட்டாலும். அது இழிநிலை ஒப்புவமையே! இவர்களுக்கு இப்படிப்பட்டதொரு இழிவான வருணனை பொருத்தமே!.

- காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்கள்!
- இலையுதிர்ந்து, கனியற்று, இரண்டுதரஞ்செத்து, வேரற்றுப்போன மரங்கள்!
- தங்கள் அவமானங்களை நுரை தள்ளுகிற அமளியானக் கடலலைகள்!
- மார்க்கம்தப்பி அலைகிற நட்சத்திரங்கள்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு இவர்கள்மேல் உடனே வருமென பேதுரு தமது இரண்டாம் நிருபத்திலும் (2 பேதுரு 2:1-3:6). ஏற்கெனவே அறிவித்திருக்கிறார். யூதா நிருபம் எழுதப்படும் காலத்தில் அது இன்னும் சமீபமாயிருந்தது. தேவ கோபாக்கினையுடைய இவர்கள் செய்த பாவங்கள் யூதாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. அவைகளுக்கு உண்மையான விசுவாசிகள் தங்களை விலக்கிக் காத்துக்கொள்ளும்படிக்கும் அவை சொல்லப்பட்டுள்ளன.

**காமவிகாரம்** (வசனம் 4,8,16,18): கிருபை தாங்கும் எனக்கூறி துன்மார்க்க இச்சைகளினால் தங்கள் மாம்சத்தைக் கெடுத்து, நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாய் புரட்டினார்கள், இந்த வேதபுரட்டர்.

**விசுவாச தடுமாற்றம்** (வசனம் 11): உலகத்தின் முதல் கொலையாளியான காயீனைப்போல விசுவாச வாழ்க்கையில் ஆட்டம் கண்டவர்கள்; நியாயத்தீர்ப்புக்குத் தப்பித்துக்கொள்ள முடியாமல் தடுமாறியவர்கள்.

**பொருளாசைக்காரர்** (வசனம் 11): இவர்கள் பிலேயாமின் பின்சந்ததியார்! பேராசைக்கொண்டு தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படியாதோர்.

**கலக வீட்டார்** (வசனம் 11): கோராகின் கூட்டத்தாரைப்போல, தலைமைக்கு எதிர்த்து நின்று கலகம் செய்தவர்கள்; தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறவர்கள். தங்களுக்குத் தெரியாதவர்களை தூஷித்துப் பிரிந்துபோகிறவர்கள்.

**அகங்காரிகள்** (வசனம் 8,16) : ஆளுகைகளை அசட்டைபண்ணி, ஆசனங்களின் மகத்துவங்களைத் தூஷித்தவர்கள். இறுமாப்பாய்ப் பேசும் இறுக்கமான முகமுடையவர்கள். தலைக்கனம் கொண்டு, பிறரை அற்பமாய் எண்ணியவர்கள்.

**வஞ்சகர்** (வசனம் 4,12): கிருபையின் உபதேசத்தை தங்கள் மாம்ச எண்ணங்களுக்காகத் திரித்துப் புரட்டியவர்கள். கூடயிருந்து குரல்வளையை அறுக்கும் இக்காலக் கொலைக்காரார்களைப்போல, கர்த்தருடைய பந்தியில் ஒன்றாய்ப் புசித்து, பரிசுத்தமான அன்பின் விருந்துகளைக் கறைப்படுத்தியவர்கள்.

**ஜென்ம சுபாவத்தார்** (வசனம் 19) : ஆவியில்லாத இவர்களில் மாமிசம் மேலோங்கி

நின்றது. தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்யும் ஜென்மசுபாவம் நியாயத்தீர்ப்புக்கு விளைந்திருந்தது.

**பிரிவினைவாதிகள்** (வசனம் 19) : தாங்களேப் பிரிந்துப் போகிறவர்களாதலால், ஐக்கியமாய் ஆண்டவரை ஆராதிக்கும் சபையிலும் பிரிவினைகளை ஏற்படுத்தினர்.

## இன்றைய சபைக்கு யூதா நிருபம் கற்றுத்தரும் ஆறு முத்தான சத்தியங்கள்

1. கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தையும், அடிப்படை உபதேசங்களையும் எப்பொழுதும் தற்காத்துக்கொள்ள வேண்டும். இதனையே “விசுவாசத் தற்காப்புப் போதனை” என்னும் தலைப்பில் நாம் கற்றுத் தருகிறோம் (வசனம் 3).
2. கள்ள உபதேசிகள் தவறான அசுத்த வாழ்க்கை வாழ்பவர்களே; கவனமாய் இதை உற்றுநோக்கி நம்மையும் நமது ஸ்தல சபையையும் காத்துக்கொள்வது அவசியம் (வசனம் 4,8,10,12,13,16,18-19).
3. எகிப்திலிருந்து தாம் அழைத்து வந்த தமது ஜனங்கள் கீழ்படியாமை காட்டியபோது தேவன் அவர்களை அழித்தார். இச்சையும், பெருமையும் கொண்ட தமது தூதர் கூட்டத்தையே தமது சமூகத்தைவிட்டு தேவன் தள்ளிவிட்டார். தாறுமாறான இச்சைரோகங்களை தங்களில் கொண்டிருந்த சோதோம், கொமோரா மற்றும் அவற்றைச் சார்ந்தப் பட்டணங்களையும் தப்பவிடாமல் தேவன் அழித்தார். அப்படியிருக்க, கள்ளப்போதகர்களாகிய இவர்களையும், இவர்களைப்போன்று இன்று ஆங்காங்கே செயல்படும் அனைவரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் (வசனம் 4,5-7,11,14,15).
4. இடையூறு செய்யும் ஈன மக்கள் ஏராளமானபேர் சபைக்குள்ளும் புகுந்து உண்மையான விசுவாசிகளையும் இழுக்க முயற்சிப்பர். விசுவாசிகள் தப்பி கரை சேருவதற்கும், இரட்சிக்கப்படுவதற்கும், மிகுந்த கவனத்துடனும், பொறுமையுடனும், விசுவாச ஓட்டத்தில் தொடர வேண்டும் (வசனம் 17-23).
5. அழைக்கப்பட்ட அனைவருக்கும் தேவன் தமது இரக்கத்தைக் காண்பிக்கின்றாரே! எனவே அழைக்கப்பட்டோரும், இவ்வுலகில் அனைவருக்கும் இரக்கம் காட்டவேண்டும் (வசனம் 2,21-23).
6. விசுவாசிகளாய் நிலைத்திருந்து விசுவாச வாழ்வில் பொறுமையுடன் தாக்குப்பிடித்து முன்னேறும் தமது பிள்ளைகளை தேவன் வழுவாதபடி காப்பார்; கடைசிவரைக் காத்துக்கொள்ளுவார், மிகுந்த கிருபைகளைத் தருவார். ஆமென் ஆமென்!

---


## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்

# பாடல் பிறந்த கதை



ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்
என் உள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்
துன்பத்தில் என் நல்துணை அவரே,
என்றென்றும் ஜீவிக்கிறார் - (2)

இப்பாடல் 1960ல் பாளையங்கோட்டையில் உள்ள திருச்சபைகளில் இப்பாடல் மிகவும் பிரபலமடைந்தது. கன்வென்ஷன் கூட்டங்களிலும், இளைஞர் இயக்கக் கூட்டங்களிலும் ஏன், ஞாயிறு பள்ளிகளிலும் இப்பாடல் ஓங்கி ஒலித்தது. ஒவ்வொரு கிறிஸ்தவரின் உள்ளத்தின் ஆழத்திலிருந்தும் வானுயர எழுந்தது. ஏனென்றால் அது கிறிஸ்தவர் அனைவருக்கும் மனப்பாடமாகத் தெரிந்த பாடலாக இருந்தது.

இப்பாடலை **எமில் ஜெபசிங்** என்ற ஆண்டவரின் ஊழியர் எழுதினார். அவர் அகில உலக வானொலி நிலையத்தின் தென் ஆசிய இயக்குனராக இருந்தார். இன்று நம் நாட்டின் மிகச்சிறந்த மிஷனெரி இயக்கமாக விளங்கும். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவை வித்திட்டு, உரமிட்டு, வளர்த்த தொடக்க காலத் தலைவர்களில் இவரும் ஒருவர். பாடல் என்றால் எமில் என்று இவ்வியக்க மக்கள் கூறுமளவிற்கு இம்மக்கள் உற்சாகமாகப் பாட வழிவகுத்தார். அழிந்து போகும் கோடிக்கணக்கான இந்தியர் மீதான இவரது உள்ளத்தின் ஆத்தும பாரம் இவரது பாடல்களில் ஒவ்வொரு வரியிலும் தொனிக்கும். இனிமையான இராகங்கள் இவரது பாடல்களின் சிறப்பு அம்சமாகும்.

சகோதரர் எமில் ஜெபசிங் 10-01-1941 அன்று அருள்திரு. நவமணி அவர்களுக்கும் கிரேஸி அம்மையார் அவர்களுக்கும் மகனாக பிறந்தார், தனது வாலிப நாட்களிலே, சகோதரர் பி.சாம்.சகோ.ஜீவானந்தம் போன்ற ஊழியர்களின் வழிநடத்துதலால், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பண்ணைவிளையில் தமது 17வது வயதில் ஆண்டவரின் அன்புக்குத் தன்னை அர்ப்பணித்தார். ஏமி கார்மைக்கேல், தாமஸ் உவாக்கர், ஈசாக்கு ஐயர் போன்ற ஊழியர்கள் பணிப்புரிந்த அவ்வூரிலே, இயேசு கிறிஸ்துவால் மீட்கப்பட்டு, மிஷனெரி தரிசனத்தையும் பெற்றதால் பண்ணைவிளையைப் பரிசுத்தபூமி என்று இன்றளவும் எமில் நன்றியோடு நினைவு கூறுகிறார்.

ஆண்டவரின் கரத்தில் தன்னை அர்ப்பணம் செய்த எமில், முதலில் பண்ணைவிளையில் வாலிப நண்பர்களை ஆண்டவருக்காக ஆதாயம் செய்தார். அவர்கள் அனைவரும் கூடி ஜெபித்து, ஐக்கியத்தில் பெலப்பட்டனர். அந்நாட்களில் 1959ம் ஆண்டின் பெரிய வெள்ளிக்கிழமையன்று, வழக்கம் போல் ஜெபத்திற்காக இந்த இளைஞர் குழு கூடியது. அன்று சிறப்பாகத் தியானம் செய்த ஆண்டவரின் திருப்பாடுகளும், சிலுவை மரணமும் தங்கள் உள்ளத்தில் வேதனை நிறைந்த பாரமாக அழுத்த, அவர்கள் அமர்ந்திருந்தனர். சோர்ந்திருந்த அவர்கள், முதலில் ஆண்டவரைத் துதித்து பாடி, அதன் பின்னர் ஜெபிக்க விரும்பினர். அந்நிலையில் தூயாவியானவர் எமிலுக்குள் செயல்பட்டார். அந்த அறையில் கரும்பலகை ஒன்று இருந்தது. சாக்குத்துண்டை எடுத்த எமில், தூயாவியானவரின் வழிநடத்துதல்படியே இப்பாடலை நேரடியாக கரும்பலகையில் மடமடவென்று எழுதி முடித்தார். அவ்வேளையில் இதற்கேற்ற இசையும் அவரது உள்ளத்தில் சுரந்தது.

பெரிய வெள்ளிக்கிழமை அன்றும் இயேசு ஜீவிக்கிறார் பாவ வாழ்விலிருந்து என்னை மீட்டெடுக்க ஈனச்சிலுவையில் தம்மை அர்ப்பணித்து மரித்தார். ஆயினும், இதோ அனைத்து நாட்களிலும் முடிவின்றி ஜீவிக்கிறார். அவரை ஏற்றுக்கொண்ட என் உள்ளத்தில் ஜீவிக்கிறார் என எமில் நம்பினார். அவர் என் உள்ளத்தில் வாழ்கிறார் என்று எண்ணிய எமிலுக்கு உன்வாழ்வில் அற்புதங்களைச் செய்வதற்கே என்ற ஆவியானவரின் பதில், திருமறையில் உள்ள அரிய செயல்களை அவரது உள்ளம் நினைவு கூர்ந்தது. அதுவே கரும்பலகையில் பாடலாக உருவானது.

இப்பாடலை எமில் இசையுடன் பாடப் பாட அங்கு கூடியிருந்த இளைஞர் அனைவரும் ஒரு சில நிமிடங்களில் கற்றனர். உற்சாகமாகப் பாடினர். அப்பெரிய வெள்ளிக்கிழமையானது அனைத்து நாட்களிலும் வாழ்ந்து, ஆட்சிபுரியும், மகிமை நிறைந்த ஆண்டவரை, அற்புத நாயகராய்த் துதிக்கும் வேளையாய் மாறியது.

சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெற்ற இளைஞர்கள், உற்சாகமாய் ஜெபத்தில் தரித்து நின்றனர். இயேசுவைப் புகழ்ந்து உற்சாகமாகப் பாடுங்கள்.

நன்றி: கேரீத்

---

## மிக முக்கியம்

நீ சொல்வதெல்லாம் உண்மையென்றாலும்
நீ உண்மையானவனா என்பதே முக்கியம்!

நீ காட்டுவது நல்வழி என்றாலும்
நீ நடப்பது அவ்வழிதானா என்பதே முக்கியம்!

உன் சிந்தனைகள் யாவும் சிறந்தவை என்றாலும்
உன் செயல்கள் சிறந்தவையா என்பதே முக்கியம்!

உன் நண்பர்கள் யாவரும் நல்லவர்கள் என்றாலும்
நீ ஒரு நல்ல நண்பனா என்பதே முக்கியம்!

உன் கணக்குகள் யாவும் சரி என்றாலும் - உன்னை
நீ சரியாக கணிக்கிறாயா என்பதே முக்கியம்!

உன் வாய் கூறும் தத்துவங்கள் சரி என்றாலும்,
உன் வாழ்க்கை முறை அதை சார்ந்ததா என்பதே முக்கியம்!

என் பார்வைக்கு எல்லாம் சரி என்றாலும் - உன்னை
பார்ப்பவர்களுக்கு நீ சரியாயிருக்கிறாயா என்பதே முக்கியம் !

சகோதரி. P.ஜெனிஃபர் நந்தினி, மல்லூர் ஏ.ஜி. சபை

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17
செல் : 94434 15484



# உயிர்மீட்சியே நமது தேவை

**பாகம் : 6**

**Rev. Dr. L. ஜெயபாலன்**

கொடைக்கானல்

உயிர்மீட்சி (Revival) என்றால் திரும்பவும் உயிர்பெறுதல் (Coming back to life) என்பதாகும். பாவத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கப்பட்டு, பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்று, கிருபையினாலும் (சங்.119:99) கடவுளின் வார்த்தையினாலும் (சங்.119:93,107) ஆவியானவராலும், கடவுளுக்காக பல விதங்களில் பிரகாசிப்பதாகும். இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி (சங்.85:6), ஆராதனை (Worship), ஜெபவாழ்க்கை (Prayer Life), வேதவசனத்தில் வாஞ்சை (Desire for God's word), ஒப்புரவாகுதல் (Reconciliation), பரிகாரம் செய்தல் (Restitution), ஆத்தும ஆதாயம் (Soul winning) போன்றவைகள் காணப்படும்.

உயிர்மீட்சி அடைந்து கர்த்தரால் வல்லமையாய் உபயோகிக்கப்பட்டவர்கள், சார்லஸ் பின்னி, இவான் இராபர்ட்ஸ், T.L.ஆஸ்போர்ன், ஒரல் இராபர்ட்ஸ் போன்றவர்கள் ஆவார்கள். இன்னும் எண்ணற்றோரை தேவன் உபயோகித்துள்ளார். உபயோகித்தும் வருகின்றார். இவர்களுக்குள்ளே தேவ அன்பு பரிசுத்தாவியானவரால் ஊற்றப்பட்டு, எல்லா மக்களையும் ஒரே விதமாக கருதி வாழ்க்கையிலும், வார்த்தையிலும், தேவனுக்காக பிரகாசித்தார்கள் என்றால் மிகையாகாது.

நாம் வாழ்ந்து வருகின்ற காலம் விஞ்ஞான அறிவில் மிகவும் உயர்ந்து இருக்கின்ற ஒரு காலம். பிரயாணம், படிப்பு, பலவிதமான கண்டுபிடிப்புகள் போன்றவை பிரபலமாக இருக்கின்ற காலம். 60 வருடங்களுக்கு முன் திரைப்படங்கள் தியேட்டர்களில் வெள்ளை திரையில் காணப்பட்டன. 1970-ல் தொலைக்காட்சி பெட்டிகள் பிரபலமாயின. இன்று கையிலுள்ள செல்போனில் (Smart Phone) எல்லாவற்றையுமே காணலாம்.

கடவுள் கையில் உலகமே இருக்கின்றது என்ற ஓர் ஆங்கிலப் பாடல் பிரபலமான ஒன்றாகும். (He got the whole world, in his hands. He got the whole world). இன்றைய மக்கள் "என் கையில் (Smart Phone) உலகமே இருக்கின்றது" என்கின்றனர். 60 வருடங்களுக்கு முன் வருடத்திற்கு ஒரு படம் திரைகளில் வெளியிடப்படும். அதைப் பார்த்தவர்கள் அழுது கொண்டே வீட்டிற்குச் செல்வார்கள். இன்றைய நாட்களில் திரையிலோ T.V.யிலோ, செல்போனிலோ பார்ப்பவர்கள் ஒரு சிலரோ பலரோ, அரிவாளை கையில் ஏந்துவார்கள் அல்லது ஒரு ஆளை கடத்திச்சென்று கற்பழிப்பார்கள் அல்லது கொன்றுவிடுவார்கள். இவைகளை இன்றைய நாட்களில் நாம் கண்கூடாகக் காண்பவையாகும். அரசியல் பிரச்சனை (Political Crisis), வறுமை பிரச்சனை (Poverty Crisis), ஆதிக்க பிரச்சனை (Power Crisis), மக்கள் தொகை பிரச்சனை (Population Crisis), பயங்கரமான தீமை பிரச்சனை (Perversive Evil Crisis), போன்ற பிரச்சனைகள் கலக்கிக் கொண்டிருக்கின்றன.

மிஷனரிமார்கள் தியாகத்தின் அடிப்படையில் அவைகளை நிறுவினார்கள். சபைகள் ஏராளமாக இன்று உருவாகின்றன. வேதாகமக் கல்லூரி

சென்றவர்களையும், செல்லாதவர்களையும் கர்த்தர் வல்லமையாய் உபயோகித்து வருகின்றார். இதற்கிடையில் சபைத்தலைவர்கள் விசுவாசிகள் ஒருகாலத்தில் வல்லமையாய் கர்த்தருக்காகப் பிரகாசித்தவர்கள் இன்றைய நாட்களில் அனலுமின்றி குளிருமின்றி மனதில் உள்ள பின்மாற்றத்தை சொல்லமுடியாமல் ஏனோதானோ என்று வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஒரு சமயத்தில் உயிர்மீட்சி அடைந்தவர்கள். இவர்களின் இன்றைய தேவை (Renewal) உயிர்ப்பிக்கப்படுதல் ஆகும்.

இன்று உலகமெங்கிலும் நற்செய்தி மும்முரமாக அறிவிக்கப்படுகிறது. அதேவேளையில் ஊழியத்திற்கு அநேக தேசங்கள் கதவுகளை அடைத்துவிட்டன. இதன் மத்தியில் காணப்படும் பெரும் அதிர்ச்சி என்னவெனில், அநேக தேவதாசர்களும், விசுவாசிகளும், வாலிபர்களும் இருந்த இடம் தெரியாமல் பல கண்ணிகளில் மாட்டிக்கொண்டு வேதனைப் படுகின்றனர். கர்த்தருக்காக பிரகாசித்த அநேக வாலிபர்கள் இன்று ஊழியத்தில் இல்லை. இவர்கள் ஒரு சமயத்தில் வேதமும் கையுமாக இருந்தவர்கள். தென்னந்தோப்பு, கடற்கரை இவர்களுடைய ஜெபஸ்தலமாக இருந்தன. எந்த நேரமும் ஆத்தும ஆதாயம் செய்தவர்கள்... இன்றோ!

இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே, அப்படிப்பட்டவர்களை உங்களுக்கு தெரியுமல்லவா! அல்லது நீங்களே அந்த நிலையில் இருக்கலாம் அல்லவா! ஏன் அவர்களுக்கு இந்த நிலை அல்லது எனக்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டது என கேள்வி எழும்பலாம். ஒருவரது அல்லது உங்களது வாழ்க்கையில் உயிர்மீட்சியின் நாட்களில் எவைகள் காணப்பட்டன என்பதை ஆராய்ந்து பாருங்கள்.

**ஜெபவாழ்க்கை :**

தனிமையாக ஜெபிக்க விரும்பினீர்கள். அதற்காக நேரத்தை ஒதுக்கினீர்கள். ஜெபத்தில் வல்லமை காணப்பட்டது. நீண்ட நேரம் ஜெபித்தீர்கள். பரிசுத்தவான்களுடன் சேர்ந்து ஜெபித்தீர்கள். முழுஇரவு ஜெபத்திற்குச் சென்றீர்கள். சொப்பனங்கள் தரிசனங்கள் மூலம் கர்த்தர் பேசுவதை உணர்ந்தீர்கள்.

**வேத வாசிப்பு :**

வேதாகமத்தை அதிகமாக வாசித்தீர்கள். கர்த்தர் உங்களுடன் பேசினார். தினமும் வாக்குத்தத்தங்களைப் பெற்றீர்கள். வசனங்களை மனப்பாடம் செய்தீர்கள். ஆவிக்குரிய நூல்களை வாசிப்பதில் ஓய்வு நேரத்தை செலவழித்தீர்கள். ஆவிக்குரிய பத்திரிக்கைகள் எப்பொழுது வரும் என ஆவலுடன் காத்திருந்தீர்கள். ஆவிக்குரிய நூல்கள் உங்கள் உள்ளத்தில் தெம்பைத் தந்தது. நாட்கள் சென்றதே தெரியவில்லை. புதிய ஏற்பாடு உங்கள் கையில் அல்லது பையில் இல்லாமல் வெளியே சென்றது இல்லை.

**சபை ஐக்கியம் :**

ஆலயத்திற்குச் செல்வதென்றால் ஒரே வாஞ்சை. ஒரு கூட்டத்தையும் தவறவிட மாட்டீர்கள். ஒவ்வொரு வாக்கியத்தையும் கண்ணும் கருத்துமாகக்கேட்டு முக்கியமானதை குறிப்பேட்டில் எழுதுவீர்கள். ஜெபித்துக்கொண்டே பிரசங்கங்களைக் கேட்பீர்கள். தேவ ஊழியர்கள், விசுவாசிகள், ஆவிக்குரியவர்களை சந்திப்பதில் விருப்பம் கொண்டீர்கள். இயேசுவைக் குறித்தும், வேத புருஷர்கள், தேவ ஊழியர்களைக் குறித்தும் ஆவலுடன் பேசினீர்கள் அல்லது

கேட்பீர்கள். நேரம் வேகமாகச் சென்றது. ஆவிக்குரிய அனுபவமுடைய வயது முதிர்ந்தவர்களின் ஆலோசனைகளைக் கேட்க ஆவலாயிருந்தீர்கள்.

**ஆவிக்குரிய அனுபவம் :**

ஆவிக்குரிய பாடல்கள் எப்பொழுதும் உங்கள் வாயில் காணப்பட்டது. உலகப் பாடல்கள் காதில்கூட விழ விருப்பம் இல்லை. இரட்சிப்பு, துதித்தல், பரிசுத்த வாழ்க்கை, இரண்டாம் வருகைப் பாடல்கள், பல்லவிகளைப் பாடினீர்கள். தேவ சமூகத்தில் அடிக்கடி கண்ணீருடன் ஜெபித்தீர்கள். உங்களுடைய வாழ்க்கையை அடிக்கடி பரிசோதித்து வந்தீர்கள். உங்கள் முகத்தில் அமைதி காணப்பட்டது. கண்கள், உங்கள் சாந்தக் குணத்தைக் காட்டின. உங்களுடைய உடை, நடை, ஆண்டவருடைய பிள்ளை என்பதைக் காட்டிற்று. எல்லா மக்களும் தேவ சாயலில் உண்டாக்கப்பட்டதை உணர்ந்து, தேவ மக்களை உங்கள் உடன் பிறப்புகளாகக் கருதி, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினீர்கள். ‘‘தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும் எனக்குத் தாயுமாய் இருக்கிறான்” (மாற்கு 3:32-35). உங்கள் வாழ்க்கையில் சீத்திம் மரத்தின் பட்டை நன்றாக உரிக்கப்பட்டிருக்கிறது.

**ஆத்தும ஆதாயம் :**

முன்பு இயேசுவின் அன்பை பிறருக்கு அறிவித்து பழக்கமில்லை. இருப்பினும் தனக்குத் தெரிந்ததை அல்லது உங்கள் சாட்சியையாவது கூறினீர்கள். ஆவியானவரைச் சார்ந்து ஜெபசிந்தையுடன் அறிவித்தீர்கள். சில வினாடிகளில் கேட்பவர் கண்களில் கண்ணீர் ததும்புவதையும் கல்வாரியின் அன்பினால் அநேகர் இயேசுவண்டை நடத்தப்படுவதையும் கண்டீர்கள். உங்கள் வாழ்க்கையின் மூலம் கைப்பிரதிதாள்கள் மூலம் இயேசுவை அறிவித்தீர்கள். பிறமக்களை, வீட்டுக்கூட்டம், சபை ஆராதனை, நற்செய்திக் கூட்டம் இவற்றிற்கு அழைத்தீர்கள். டவுண் பஸ் கட்டணம் இல்லாதவர்களுக்கு நீங்களே “டிக்கட்” வாங்கி அழைத்துச் சென்றீர்கள். ஆத்தும பாரம் அதிகரிக்கவே தினமும் ஒரு நபருக்கு சாட்சி கொடுப்பேன் என தீர்மானித்தீர்கள். இயேசுவை அறியாத ஒருவரையும் நீங்கள் விட்டுவிட வில்லை. தேவன் மகிமை அடைந்தார்.

இப்படிப்பட்ட அனுபவங்கள் இப்பொழுது உண்டா? என்று ஆராய்ந்து பாருங்கள். இல்லாவிடில் உங்களுக்கு இன்று ஒரு உயிர்மீட்சி தேவை!.

இந்த செய்தி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்குமானால் ஆலோசனை பெற பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற 94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

---



“If Christians were putting into their spiritual walk the kind of discipline that athletes put into their chosen sport, the church would be pulsating with revival life. ”

-Warren Wiersbe

# இயேசுவை பின்பற்றுவதற்கு கடினமான தேசங்கள்

இயேசுவை பின்பற்றுவதற்கு கடினமான தேசங்களை கீழே காண்கிறோம. இந்த தேசங்களில் கிறிஸ்தவத்திற்கு விரோதமான உபத்திரவங்கள் அதிகமாக உள்ளன. உலகிலேயே கிறிஸ்தவர்கள் அதிகமாக துன்பப்படும் தேசங்களில் வடகொரியா முதல் இடத்தில் உள்ளது. இந்தியா பத்தாவது இடத்தில் உள்ளது. உபத்திரவத்தின் அளவையும் தீவிரத்தையும் கணக்கில் கொண்டும் இந்த தேசங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| தீவிர துன்புறுத்தல்<br>Extreme Persecution | மிக அதிக துன்புறுத்தல்<br>Very High Persecution | | அதிக துன்புறுத்தல்<br>High Persecution |
|---|---|---|---|
| 1. வட கொரியா<br>2. ஆப்கானிஸ்தான்<br>3. சோமாலியா<br>4. லிபியா<br>5. பாகிஸ்தான்<br>6. சூடான்<br>7. எரித்திரியா<br>8. ஏமன்<br>9. ஈரான்<br>10. இந்தியா | 11. சிரியா<br>12. நைஜீரியா<br>13. ஈராக்<br>14. மாலத்தீவு<br>15. சவுதி அரேபியா<br>16. எகிப்து<br>17. உஸ்பெக்கிஸ்தான்<br>18. மியான்மர்<br>19. லாவோஸ்<br>20. வியட்நாம்<br>21. மத்திய ஆப்பிரிக்க குடியரசு<br>22. அல்ஜீரியா<br>23. துருக்மெனிஸ்தான்<br>24. மாலி | 25. மவுரிடானியா<br>26. துருக்கி<br>27. சீனா<br>28. எத்தியோப்பியா<br>29. தஜிகிஸ்தான்<br>30. இந்தோனிஷியா<br>31. ஜோர்டான்<br>32. நேபாளம்<br>33. பூட்டான்<br>34. கஜகஸ்தான்<br>35. மொரோக்கோ<br>36. புரூணை<br>37. துனிசியா<br>38. கத்தார்<br>39. மெக்ஸிக்கோ<br>40. கென்யா | 41. இரஷ்யா<br>42. மலேஷியா<br>43. குவைத்<br>44. ஓமன்<br>45. ஐக்கிய அரபு நாடுகள்<br>46. இலங்கை<br>47. கொலம்பியா<br>48. பங்களாதேஷ்<br>49. பாலஸ்தீனிய பிரதேசங்கள்<br>50. அஜர்பைஜான் |

## ஜெபியுங்கள்

- இந்த தேசங்களில் தேவன் திறந்த வாசலை ஏற்படுத்த ஜெபிப்போம்.
- இந்த தேசங்களில் வாழும் கிறிஸ்தவர்களுடைய பாதுகாப்பிற்காகவும் திருச்சபைகளின் பாதுகாப்பிற்காகவும் தேவனிடத்தில் மன்றாடுவோம்.
- இந்த தேசத்தில் இருக்கும் விசுவாசிகள் அனைவரும் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவும், கர்த்தருடைய அன்பை வெளிப்படுத்தவும் அவர்களுக்காக பரிந்து பேசி ஜெபிப்போம்.
- விசுவாசிகளை உபத்திரவப்படுத்துகிறவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

https://www.opendoorsusa.org/christian-persecution/world-watch-list/



தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

# ஜாதிகளை இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்


**Rev. K. சுந்தர்சிங்**

Regional Missions Director, North West Region


"என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்கு சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங்கீதம் 2:8).

இங்கே ஜாதிகள் என்று வேதம் குறிப்பிடுவது மக்கள் இனங்கள் (People Group) (கிரேக்க பதத்தில்-Ethne) என்பதை நாம் அறிய முடியும்.

**மக்கள் இனங்களைக் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தம்**

ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகப் பணிந்து உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள் (சங். 86:9).

நமது தேசத்தில் உள்ள மக்களினங்கள் மேல் தரிசனம் கொள்வதே இன்றைய திருச்சபைகளின் பிரதான கடமையாகும். நமது தேசத்தில் உள்ள எல்லா மக்களினங்களும் சந்திக்கப்பட வேண்டும் என்ற தரிசனத்தோடு மிஷனரி இயக்கங்கள் செயல்பட ஜெபிக்க வேண்டும்.

"ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒரு மிஷனரி, கிறிஸ்து இல்லாத ஒவ்வொரு மனிதனும் ஒரு மிஷனரி தளம்" என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

"இன்றைய திருச்சபைகளின் பிரதான பொறுப்பு மிஷனரி ஊழியம் என்ற குறிக்கோள் மட்டுமே"

இன்றைய தலைமுறையினரை சுவிசேஷமயமாக்குவதே இன்றைய கிறிஸ்தவ தலைமுறையின் பிரதான பொறுப்பு என்பதை இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் புரிந்திருக்க வேண்டும்.

சுவிசேஷப் பணியில் ஈடுபடாத எந்த திருச்சபையிலும் பாவம் என்ற பாசிதான் படரும். மேலும் நாம் மிஷனரி பணியில் ஈடுபடவில்லையென்றால் தேவனுடைய பிரதான கட்டளைக்கும், தேவனுடைய சித்தத்திற்கும் எதிர்த்து நிற்கிறோம் என்பதே அர்த்தமாகிறது. ஆண்டவருக்காக எந்த ஒரு தியாகத்தையும் செய்ய சபை தயங்கக்கூடாது. தேவனிடத்தில் பெரிய காரியத்தை எதிர்பார்க்கிற நாம் தேவனுக்காக பெரிய காரியங்களை சாதிக்க வேண்டுமல்லவா? நாம் இரண்டாம் வருகையைக் குறித்துப் பேசுகிறோம். ஆனால் இன்னமும் பாதி உலகம் கிறிஸ்துவின் முதலாம் வருகையைக் குறித்து கேள்விப்படவே இல்லையே. இது நியாயமா? என்று ஆஸ்வால்டு. ஜே. ஸ்மித் என்னும் தேவ மனிதர் கேட்பது நியாயமே.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆண்டவருக்காக எரிந்து, உருகி இறுதியில் உருவமற்று போகும் மெழுகுவர்த்தியாக இருக்க வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கின்றார். ஆண்டவரே. நான் உமக்காக மாடாய் உழைத்து, ஓடாய் தேய்ந்து, மெழுகுவர்த்தியாய் உருகி உருவமற்று போக விரும்புகிறேன் என்ற அர்ப்பணிப்புள்ள ஜெபத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஏறெடுக்க வேண்டும் என்பதே ஆவியானவரின் பெருமூச்சு.

## மக்கள் இனங்களைக் குறித்த தேசிய பார்வை

இந்தியாவில் உள்ள மொத்த மக்களினங்கள் - சுமார் 2550

இந்தியாவில் இதுவரை சந்திக்கப்பட்ட மக்களினங்கள் - சுமார் 300

இந்தியாவில் இன்னமும் சந்திக்கப்படாத மக்களினங்கள் - சுமார் 2250

அதாவது 0.1 சதவீதத்திற்கும் குறைவாய் (1000:1) கிறிஸ்தவர்களைக் கொண்ட மக்கள் இனங்கள் சுமார் 2250 நமது தேசத்தில் உள்ளது. கி.பி.52-ல் முதலாவது தோமா நமது தேசத்திற்கு வந்தது சபை சரித்திரம். கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் ரோமன் கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்டண்டு மிஷனரிகள் (பிரான்சிஸ் சேவியர், சீகன் பால்கு) போன்றோர் இந்தியாவில் ஊழியம் செய்து வந்துள்ளனர். கடந்த 100 வருடங்களாக பெந்தெகொஸ்தே இயக்கங்கள் நமது தேசத்தில் தீவிர அறுவடைப் பணியை செய்து வந்தாலும் இதுவரை சுமார் 300 மக்களினங்களே சந்திக்கப்பட்டுள்ளன.

## கிறிஸ்துவின் பிரதான கட்டளையும், மக்கள் இனங்களும்

ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி.... (மத்.28:19).

இங்கே ஆண்டவர் சகல ஜாதிகளையும் என்று குறிப்பிடுவது “மக்கள் இனங்கள்” (Ethne) என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

1.ஆதி திருச்சபை வளர்ச்சியில் இந்த நோக்கம் நிறைவேறியது. தனிநபர் மனமாற்றத்தில் இருந்து சமுதாய, மக்கள் இன மனமாற்றம் நிறைவேறினது.

2.சமுதாய, மக்கள் இன மனமாற்றத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் தரிசனமுடையவராய் செயல்பட்டார்.

3.யோவான் கண்ட பரலோக தரிசனத்தில் எல்லா மக்களும், இனங்களும், பாஷைக்காரர்களும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக நிற்கக் கண்டார்.

இவைகளுக்கு பின்பு நான் பார்த்தபோது இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவரும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்... சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன் (வெளி.7:9). இங்கே சகல ஜாதிகள் என்பது (Ethne) மக்கள் இனங்களையே குறிக்கிறது. எனவே தேவன் தம்முடைய வாக்குத்தத்தை நம் இந்திய தேசத்தில் உள்ள சபைகளைக் கொண்டு தான் நிறைவேற்றுவார். “நாம் எதை இழந்தாலும் இன்னமும் நம் எதிர்காலத்தை இழக்கவில்லை”. எனவே திருச்சபைகள் மக்கள் இன தரிசனமுள்ள சபைகளாக மாறட்டும். சபைகளில் உள்ள குடும்பங்கள் மிஷனரி தரிசனமுள்ள குடும்பங்களாய் மாறட்டும். தங்கள் பிள்ளைகளை மிஷனரி பணிக்கு அர்ப்பணிக்கிறவர்களாக மாறட்டும்.

“வாழ இன்னும் ஒரு வாழ்க்கையிருந்தால் அதை இந்தியாவிற்காய் கொடுப்பேன்” என்ற வாசகம் நமது ஸ்தாபனத்தில் இந்தியாவிற்கு வந்த மிஷனரி ராபர்ட் எட்வர்ட்ஸ் அவர்களின் கல்லறையில் எழுதப்பட்டுள்ளது. அன்பு கிறிஸ்தவ சமுதாயமே நம் பிள்ளைகளை நம் தலைமுறையில் வாழும் இந்திய மக்கள் இனங்களை சந்திக்க பிரதிஷ்டை செய்வோமா?.

ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாய் பிரசங்கிக்கப்படும் அப்போது முடிவு வரும் (மத். 24:14).

கர்த்தர் தாமே இந்திய திருச்சபைகள் மூலம் நடைபெறும் மிஷனரி பணிகளை பன்மடங்காக ஆசீர்வதித்து பெருக செய்வாராக.

## ஒரு வழி மிஷனரிகள்

கிறிஸ்துவின் ஆவியானவர் மிஷனரி ஆவியானவர்

"கிறிஸ்துவின் ஆவியானவர் மிஷனரி ஆவியாய் இருக்கிறார். நாம் எந்த அளவிற்கு அவருடன் இணைகிறோமோ அந்த அளவிற்கு நாம் சிறந்த மிஷனரியாக மாறுகிறோம்" ஹென்றி மார்ட்டின் (இந்தியா மற்றும் பெரிசியா மிஷனரி).

இருபதாம் நூற்றாண்டு மிஷனரிகளின் சகாப்தமாக இருந்தது. பல "ஒரு வழி" மிஷனரிகளை உருவாக்கியது. இவர்கள் தங்கள் உடமைகளை தங்கள் சவப்பெட்டியில் எடுத்துக்கொண்டு தங்கள் மிஷன் பணித்தளத்திற்கு ஒரு வழி பயண சீட்டையே வாங்கினார்கள். ஏனென்றால் அவர்களுக்கு தெரியும் அவர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்புவது இல்லை என்று.



பீட்டர் மில்னே அப்படிப்பட்ட ஒரு மிஷனரியே. அவர் நியூ ஹெப்ரைட்ஸ் என்னும் இடத்தில் உள்ள "தலையை துண்டாடும்" பழங்குடி இனத்தவர்கள் மத்தியில் ஊழிய அழைப்பை பெற்றார். இந்த கூட்டத்திற்குள் சென்று எல்லா மிஷனரிகளையும் அவர்கள் கொன்றனர். ஆனால் மில்னே பயப்பட்டு பாதுகாப்பை நோக்கி செல்லவில்லை. அவர் நியூ ஹெப்ரைட்ஸ்-யில் ஐம்பது வருடம் ஊழியம் செய்தார். அந்த பழங்குடியினர் அவரை அடக்கம் செய்தார்கள். அவரின் கல்லறையில் இந்த வார்த்தைகள் பொறிக்கப்பட்டது.

**"அவர் இங்கே வந்தபோது வெளிச்சம் இல்லை**

**அவர் இங்கிருந்து செல்லும்போது இருள் இல்லை"**



ஒருவரின் கல்வெட்டில் இப்படிப் பொறிக்கப்படுவது எவ்வளவு மேன்மை! இப்பொழுது சபையில் உள்ள ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட கிறிஸ்துவின் ஆவியாகிய மிஷன் ஆவியை பெற்றவர்களாயிருந்தால் சபை எவ்வளவு மேன்மையாய் இருக்கும்.

நம் அயலகத்தாரிடம் அன்பு செலுத்தவும், அவர்களை விருந்துக்கு அழைக்கவும், சமுகத்தில் ஒரு மிஷனரியாக வாழவும், ஒதுக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்யவும் தேவன் நம்மை அவருடைய மகிமைக்காக பயன்படுத்துவதற்கு நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். நாம் வாழும் இடத்திலும் மக்கள் மத்தியிலும் நாம் "ஒரு வழி" மிஷனரி போல் செயல்பட்டால் எத்தனை நலமாக இருக்கும்!

## தமிழ் பிரதேச மிஷனரி இயக்க அறிக்கை

### மிஷன் பிரயாணங்கள்

ஏப்ரல் மாதம் 9-ம் தேதி முதல் 13-ம் தேதி வரை கோவை வடக்கு மற்றும் தெற்கு மண்டல போதர்களில் சிலர் உத்திரபிரதேசம் மற்றும் உத்திரகாண்ட் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று, நமது தமிழ் பிரதேசத்திலிருந்து உதவி பெறுகிற மிஷனரிகளை ஒருங்கிணைத்து இரண்டு நாட்கள் கருத்தரங்கு மற்றும் 12 மணி நேர ஜெபங்களை நடத்தி மிஷனரிகளை உற்சாகப்படுத்தி வந்துள்ளனர். AGNI வடக்கு பிரதேச தலைவர் பாஸ்டர் சாஜி வர்கீஸ் அவர்கள் ஊழிய ஒழுங்குகளைச் செய்தார்கள்.

ஏப்ரல் 11-ம் தேதி முதல் 13-ம் தேதி வரை Rev.T.R. ஜான் வின்ஸ்லி, Rev.T.C. நாதன், Rev. சாமுவேல் ஜெபராஜ், Rev.K.சுந்தர் சிங், Rev.N.S.டேவிட் ஆகியோர் கர்நாடக மாநிலத்திற்கு சென்று நமது தமிழ் பிரதேசத்திலிருந்து உதவி பெறுகிற மிஷனரிகளை ஒருங்கிணைத்து இரண்டு நாட்கள் கருத்தரங்கு மற்றும் 12 மணி நேர ஜெபங்களை நடத்தி மிஷனரிகளை உற்சாகப்படுத்தி வந்துள்ளனர். பாஸ்டர் ஜெயக்குமார், பெங்களூரு அவர்கள் ஊழியங்களை ஒழுங்கு செய்தார்கள்.

## மிஷன் கன்வென்ஷன்கள்

17.04.2019 அன்று பெரியகுளம் மண்டலத்தின் சார்பாகவும், 30.05.2019 அன்று செங்கல்பட்டு மண்டலத்தின் சார்பாகவும் மிஷன் கன்வென்ஷன் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு மண்டலத்திலும் சுமார் 200 பேர் கலந்து கொண்டனர்.

இரண்டு மண்டல மிஷன் கன்வென்ஷன்களிலும் Rev.A.எட்வின் பிரபாகர் (நாசரேத் மண்டல தலைமைப் போதகர், மிஷன் இயக்க துணை தலைவர்) அவர்கள் சிறப்பு செய்தியாளராக கலந்துகொண்டு சிறப்பித்தார். இரண்டு மண்டலத்தின் மிஷன் பொறுப்பாளர்கள் தங்கள் மண்டலத் தலைமைப் போதகரோடு இணைந்து சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## ஜெப விண்ணப்பங்கள்

- நமது தமிழ் பிரதேசத்திலிருந்து அநேகர் மிஷனரிகளாக புறப்பட்டுச் செல்ல தங்களை அர்ப்பணிக்க ஜெபிக்கவும்.
- ஒவ்வொரு திருச்சபையும் மிஷனரி ஊழிய பாரத்துடன் செயல்பட ஜெபிக்கவும்.
- நமது மிஷன் பணித்தளங்களில் சபைக்கென சொந்த இடங்கள் வாங்க, சபைகள் கட்டப்பட பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கவும்.
- சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு மனுஷீக தடைகள் நீங்க ஜெபிக்கவும்.
- மிஷனரியாக குடும்பமாக செல்பவர்கள் தங்களை அர்பணித்து ஊழியம் செய்ய, பின்மாற்றம் அடையாமல் இருக்க ஜெபிக்கவும்.
- மிஷனரியின் குடும்பங்கள், திருச்சபையின் மக்கள் பாதுகாக்கப்பட மற்றும் மிஷன் பணித்தளங்களில் திருச்சபைகள் வளர்ந்து பெருக ஜெபிக்கவும்.
- தமிழ் பிரதேச மிஷன் இயக்கத்திற்காகவும், அதின் திட்டங்களும், தரிசனங்களும் நிறைவேற ஜெபிக்கவும்.

## பீல் மைனா (மினா) மக்களினத்திற்காக ஜெபியுங்கள்

மக்கள் இனம் : பீல் மைனா (மினா); மொழி : வாக்ரி, பீல்

மக்கள் தொகை : 1,07,000; கிறிஸ்தவர்கள் : 0.11%

நம்பிக்கை : பீல் (மினா) இன மக்கள் தங்களை விஷ்ணுவின் முதல் அவதாரமான மச்ச அவதாரத்தின் சந்ததிகளாக எண்ணுகின்றனர். பாரம்பரிய நம்பிக்கையுடைய இவர்கள் தங்களது ஜாதிக்காக வைராக்கியம் பாராட்டுபவர்கள். குழந்தைகள் திருமணம் நடத்தும் பழக்கம் உண்டு.

அதிகம் வாழும் பகுதி : ராஜஸ்தான்.

தத்தெடுத்துள்ள மண்டலம் : செங்கோட்டை

## மிஷனரிகளின் பணித்தள சாட்சிகள்

**1. பாஸ்டர் பப்லு ஜேம்ஸ், உத்தம்நகர், புதுடெல்லி** : கடந்த மாதத்தில் எங்களது சபைக்கு பிசாசு பிடித்திருந்த சப்னா என்ற சகோதரியை அழைத்து வந்தனர். இவர் நடு இரவில் வீட்டை விட்டு வெளியேறி தன்னைத் தானே காயப்படுத்திக் கொள்வதால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளான இவரது குடும்பத்தினர் எங்கும் விடுதலை கிடைக்காமல் மன வேதனையோடும், நம்பிக்கையோடும் சபைக்கு வந்தனர். குடும்பத்தினருக்கு வேத வசனங்களை எடுத்துக்கூறி சகோதரி சப்னாவுக்காக சபையாராக இணைந்து ஜெபித்தோம். தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார். தொடர்ந்து தேவன் சபையில் தமது வல்லமையை வெளிப்படுத்த ஜெபிக்கவும்.

**2. பாஸ்டர் குப்புராஜ் முர்மு, மாஹிவபதேர் :** எங்களது சபையை சுற்றிலுமுள்ள கிராமங்களில் கிளை ஊழியங்கள் ஆரம்பிக்க ஜெபத்தோடு பிரயாசப்பட்டு வந்தோம். சபை ஆரம்பிக்க பல தடைகள் காணப்பட்டது. ஜெபித்த கிராமங்களில் ஒன்று துவார் பஹாரி. இங்கு போசிராம் கிஷ்கு என்ற சகோதரன் திடீரென நோய்வாய்பட்டு சுயநினைவை இழந்தார். எட்டு நாட்களுக்குப் பின் எங்களிடம் ஜெபிக்க வந்தனர். நாங்கள் சென்று ஜெபித்தோம். தேவன் அவருக்கு பூரண சுகம் தந்தார். இந்த அற்புதத்தினிமித்தம் அந்த கிராமத்தில் தேவன் திறந்த வாசலைத் தந்தார். இப்பொழுது ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெறுகிறது. சுமார் 20 முதல் 30 பேர் வரை ஆராதனைக்கு வருகின்றனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

---

## ஏமி கார்மைக்கேல்



தரிசனம் கண்டாய் - எம்மேல்
கரிசனம் கொண்டாய்
தேசம் விட்டு தேசம் வந்தாய்
சீரழிந்த சிறுமிகளை மீட்க
சீற்றம் கொண்டு புறப்பட்டாய்

அந்நியராம் எம்மேல்
அன்பு பாராட்டினாய்
இன்னல் செய்தவர்க்கும்
இன்முகம் காட்டினாய்
காருண்யம் கொண்டாய் - மீட்பின்
கரம் நீட்டினாய்

தாயகம் மறந்தாய்
தன்னலம் துறந்தாய்

தரிசனம் ஒன்றே - வாழ்வில்
பெரிதெனக் கண்டாய்

இயேசுவைக் காட்டினாய் - அவர்
வழியில் நாட்டினாய்

அந்நியமாய் வந்தாய் - எம்
அன்னையாய் வென்றாய்
இன்னொரு தெரசாவா - நீ
எங்கள் தென்னக தெரசாவா?

ஏசுவின் அற்புதம் பேசும் கானாவூர்
ஏமியின் அன்பை பேசும் டோனாவூர்
டோனாவூர் இல்லம் - என்றும்
உம் பெருமை சொல்லும்.

சகோதரி. ரூத் ஐசக்,பேரையூர் ஏ.ஜி. சபை

---

**ஜெபியுங்கள் ! ஜெபியுங்கள் !**

தமிழ் பிரதேச ஏ.ஜி மாநாடு – ஜுலை 9–11
தென் இந்திய ஏ.ஜி மாநாடு – செப்.24–26



# செல்போன் ஆசீர்வாதமா? ஆபத்தா?



**Rev. R. நெல்சன் ஞானகுமார்**
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.

மொபைல் போன் இந்நாட்களில் உலகத்தின் எந்தவொரு நபருடனும் தொடர்பு கொள்ள மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருக்கிறது. ஆனால் அநேக வாலிபர்கள் அதை தவறாக பயன்படுத்தி சிக்கலில் மாட்டிக்கொள்கிறார்கள். எனவே தொலைபேசி எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை பார்ப்போம்.

**1. மிஸ்டுகால் கவனம்**

முன்பின் தெரியாத யாராவது மிஸ்டுகால் கொடுப்பார்கள். முதல்முறை எடுத்து பேசும்போது, அவர் உங்களுக்கு தெரிந்தவரா அல்லது தெரியாதவரா என்பதை அறிந்துகொள்ள முடியும். தெரியாதவரானால் தொடர்பை உடனே துண்டித்துக் கொள்ளுங்கள். சிலர் வேண்டுமென்றே சில பெண்களின் எண்களை கண்டுபிடித்து அவர்களோடு தொடர்பு கொள்ள ஆரம்பிக்கிறார்கள். இடம் கொடுத்தால் தொடர்ந்து பேச, விபரங்களை அறிந்துகொள்ள துடிக்கிறார்கள். இன்னும் இடம் கொடுத்தால், ஆசை வார்த்தைகளை கூறி அல்லது பரிதாபக் கதைகளைக் கூறி வசப்படுத்திப் பார்ப்பார்கள். அசிங்கமாக, ஆபாசமாக பேசுபவர்களும் உண்டு. மிஸ்டுகால் மூலம் ஏற்பட்ட தொடர்பு காதல், கல்யாணம் வரை சென்றவர்களும் உண்டு. உங்களுக்கு மிஸ்டுகால் விடும் ஆசாமி திருமணம் ஆனவரா, திருமணம் ஆகாதவரா, நல்லவரா, கெட்டவரா எதுவுமே தெரியாது என்பதால் அவர்கள் பேசும் ஆசை வார்த்தைகளைக் கொண்டு ஏமாந்துவிடாதீர்கள்.

**2. SMS கவனம்**

பொதுவாகவே எதிர்பாலரோடு SMS மூலம் தொடர்பு கொள்வதை கூடுமானவரை தவிர்க்க வேண்டும். Good Morning. Praise the Lord, Good night என்ற நல்ல காரியங்களைத் தான் SMS அனுப்புகிறேன். இதில் என்ன தவறு என்று கேட்கிறார்கள். எதிர்பாலரோடுள்ள உறவிலே அநேக நேரங்களில் சரியான காரியங்களில் ஆரம்பித்து பின் போக போக தவறான காரியங்களில் முடிந்து விடுகிறது. முதலில் SMS, பின்பு அதற்கு தொலைபேசியிலே பேச ஆரம்பிக்கிறார்கள். பின் நேரில் சந்தித்து பேச ஆரம்பிக்கிறார்கள். பின் தனியே சந்திக்க துடிக்கிறார்கள். பின் மாட்டிக்கொள்கிறார்கள்.

**3. உங்கள் தூக்க நேரத்தை தியாகம் செய்யாதீர்கள்**

அநேகர் இரவு 10 மணிக்கு மேல் உட்கார்ந்து, நேரம் போகிறதே தெரியாமல் விடிய விடிய உட்கார்ந்திருப்பார்கள். தூக்கம் கெட்டுவிடுகிறது. பகலில் உற்சாகமாக இருக்க முடியாது உடல் நடும் கெடும். ஒருவருக்கு குறைந்த பட்ச அளவு 6 மணி நேரம் தூக்கம் அவசியம்.

### 4. ஜெப தியான நேரத்தை தியாகம் செய்யாதீர்கள்

ஜெபத்தைவிட வேத தியானத்தைவிட முக்கியமானது ஒன்றும் இல்லை. கம்ப்யூட்டருக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்களானால், அது உங்கள் விக்கிரகமாக மாறிவிடும். ஜெபத்தில், வேதத்தில் ஆர்வம் குறைந்துவிடும். பின்மாற்றம் உங்களை தொடர்ந்து வரும்.

### 5. உங்களுடைய சரீர ஆரோக்கியத்தை தியாகம் செய்யாதிருங்கள்

அதிக நேரம் கம்ப்யூட்டரில் உட்காருவதினால், முதுகு வலி, கழுத்து வலி, உடல் பருவன், பார்வை கோளாறு, காது கேட்பதில் பிரச்சனை.... போன்ற வியாதிகள் வர அதிக வாய்ப்புகள் இருக்கிறது. உடல் கெட்டுப்போன பிற்பாடு எவ்வளவு பணம் செலவழித்தாலும் ஓரிஜினல் கிடைக்காது.

### 6. குடும்ப உறவுகளை தியாகம் செய்யாதீர்கள்

அதிக நேரம் கம்ப்யூட்டரில் உட்காருவதினால், மனிதர்கள் தனிமைப்பட்டிருக்கிறார்கள். குடும்பத்திலுள்ளவர்களோடு பேச நேரம் செலவழிக்க முடிவதில்லை. இதனால் குடும்ப உறவு பாதிக்கப்படுகிறது.

### 7. தேவைப்படும்போது மட்டும் பயன்படுத்துங்கள்

இன்டெர்நெட் பயன்படுத்த வேண்டிய அவசியமானால் மட்டும் இன்டெர்நெட் பயன்படுத்துங்கள். மற்றபடி பொழுதுபோக்கிற்காக, ஒரு நோக்கமில்லாமல் பயன்படுத்தினால் தேவையில்லாததை பார்த்து, கடைசியில் குற்ற மனச்சாட்சியில் போய்விட வாய்ப்பு இருக்கிறது.

### 8. மொபைல் கூட்டங்கள்

மொபைல் பயன்படுத்துவதற்கு உனக்கு நீயே சில சட்ட திட்டங்களை (ஒழுங்குகள்) வகுத்துக்கொள். (உதாரணமாக: படிக்கும்போது, சாப்பிடும்போது, ஜெபிக்கும்போது, ஞாயிறு ஆராதனையின் நேரம், தூங்கும்போது செல்போன் உபயோகிப்பதில்லை என்று தீர்மானிக்கலாம்). தினமும் குறிப்பிட்ட நேரத்திலிருந்து குறிப்பிட்ட நேரம்வரை செல்போன் பயன்படுத்துவதில்லை என்று முடிவு எடுக்கலாம். (உதா : இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை)

### 9.மொபைல் நோட்டிபிக்கேஸன்

செல்போனில் டிஸ்பிளே ஸ்கிரீனில் அடிக்கடி வரும் app-ஐ குறித்த அறிவிப்புகளை (Notifications) ஆப் பண்ண வேண்டும்.

### 10. நீங்கள் கண்காணிக்கப்படுகிறீர்கள்

நீங்கள் சமூக வலைதளங்களில் பதிவிடும் எந்த போட்டோவை, வீடியோவை உங்கள் மொபைலில் அழித்தாலும் அது ஏதோ ஒரு இடத்தில் பதிவாகிக்கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?. அது தேவைப்படும்போது அவை அத்தனை தகவல்களையும் மீண்டும் எடுத்துவிடலாம்.

### 11. ஒவ்வொரு நாளும் கர்த்தரிடத்தில் கிருபையை கேளுங்கள்

கர்த்தருடைய கிருபையில்லாமல் சிறு பாவத்தைக் கூட மேற்கொள்ள முடியாது. எனவே ஒவ்வொரு நாளும் அதிகாலை ஜெபம் செய்யும்போது, மொபைல் போனை சரியாக கையாள கிருபை தாரும் ஆண்டவரே என்று கேட்டு கிருபையை பெற்றுக்கொள்ளுங்கள்.

# மொபைல் அடிமைத்தனம்

## தற்சோதனை கேள்விகள்

## கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பொருத்தமான இடத்தில் டிக் போடவும்

| வரிசை எண் | கேள்வி | மிகவும் சரி | ஓரளவு சரி | இல்லை |
|---|---|---|---|---|
| 1. | ஒரு நாள் முழுவதும் தொலைபேசியை பயன்படுத்தாமல் இருப்பது கஷ்டம் தானே? | | | |
| 2. | எந்த வித முன் அறிவிப்பின்றி, திடீரென்று உங்கள் பெற்றோர் இரண்டு நாட்களுக்கு உங்கள் மொபைலை பாஸ்வேர்டுடன் கொடு என்று கேட்டால் கொடுப்பது கஷ்டம் தானே? | | | |
| 3. | காரணமே இல்லாமல் உங்கள் மொபைல் போனை அடிக்கடி எடுத்துப்பார்க்கிறீர்களா? | | | |
| 4. | உங்கள் மொபைல் போனை நீங்கள் பாத்ரூம் போகும் போதும் எடுத்துச் செல்கறீர்களா? | | | |
| 5. | மொபைல் போன் ரிங் அடிக்காமலே ரிங் அடிப்பதுபோல் தோன்றுகிறதா? | | | |
| 6. | படுக்கும் போது தலையனைக்கு பக்கத்தில் மொபைலை வைத்து படுக்கிறீர்களா? | | | |
| 7. | இரவு படுக்கும் முன்னும், காலை எழுந்தவுடனும் மொபைல் பார்க்கும் பழக்கம் உண்டா? (அதாவது ஒரு நாளை மொபைலில் ஆரம்பித்து மொபைலில் முடிக்கும் பழக்கம் உண்டா? | | | |
| 8. | உங்கள் வீட்டாரோடு பேசுகிற நேரம் மொபைல் வந்தவுடன் குறைந்துள்ளதா? | | | |
| 9. | இரவு நடுராத்திரி திடீரென தூக்கத்திலிருந்து மொபைல் போனை எடுத்துப் பார்க்கிறீர்களா? | | | |
| 10 | உங்கள் நண்பர்கள் மற்றும் பெற்றோர் நீங்கள் அதிக நேரம் மொபைல் பயன்படுத்துவதாக ரிப்போர்ட் செய்திருக்கிறார்களா? | | | |
| 11 | வீட்டில் வேலை செய்வதைவிட அதிக நேரம் ஆன்லைனில் இருக்கிறீர்களா? | | | |
| 12 | செல்போன் இருக்கும் இடத்தை விட்டு 5 அடி தூரத்திற்கு மேல் சென்றாலே ஏதோ ஒன்றை இழந்தது போல் உணர்கிறீர்களா? | | | |
| 13 | படித்துக்கொண்டிருக்கும் போது அடிக்கடி மொபைல் போன் பார்க்க சோதிக்கப்படுகிறீர்களா? | | | |
| 14 | ஞாயிறு ஆராதனை நேரத்தில், சபையில் இருந்துகொண்டே அடிக்கடி மொபைல் ஆன் செய்து பார்க்க சோதிக்கப்படுகிறீர்களா? | | | |
| 15 | நீங்கள் செல்போன் உபயோகிக்கும் போது, பல சந்தர்ப்பங்களில் உங்களுக்கு அருகில் நடக்கும் நிகழ்ச்சிகளையும், உங்களுக்கு அருகில் இருக்கும் நபரையும் கவனிக்காமல் இருந்திருக்கிறீர்களா? | | | |
| 16 | சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது அடிக்கடி மொபைல் செக் பண்ணும் பழக்கம் உள்ளதா? | | | |
| 17 | உங்களுக்குத் தெரியாத நபரிடமிருந்து வரும் SMS க்கு பதில் அளிக்கிறீர்களா? | | | |
| 18 | செல்போன் பயன்படுத்துவதினால் படிப்பில் மதிப்பெண் குறைந்துள்ளதா? | | | |
| 19 | செல்போன் பயன்படுத்துவதால் ஜெபம், வேதம் வாசிப்பதில் செலவிடும் நேரம் குறைந்துள்ளதா? | | | |
| 20 | செல்போன் பயன்படுத்துவதினால் இரவு வெகுநேரம் தூங்காமல் பல நாட்கள் இருந்துள்ளீர்களா? | | | |



# கிறிஸ்தவனின் ஓட்டம்

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை



பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவன் கிருபையும் சமாதானத்தையும் உங்கள் வாழ்க்கையில் பெருகச் செய்வாராக.

“ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்” (எபிரெயர் 12:1).

கிறிஸ்தவ வாழ்க்கையை பந்தய ஓட்டத்திற்கு நிகராக பவுல் இங்கே எழுதுகிறார். கிறிஸ்தவ வாழ்க்கையென்பது ஒரே நிலையில் இருப்பதல்ல. அது பந்தய ஓட்டம்போல ஒரு இலக்கை நோக்கி ஓடிக்கொண்டே இருப்பது, நாம் செயல்படாமல் இருப்பதல்ல. ஒவ்வொருநாளும் இலக்கை நோக்கி ஆசையாய் தொடருவது, பலதடைகள் வரும் அதனை மேற்கொண்டு ஓட்டத்தை தொடரவேண்டும். இந்த வசனத்தில் “ஆகையால் ” என்று ஆரம்பிப்பதன் அர்த்தமாவது அதற்கு முன்பதாக உள்ள மிக முக்கியமான காரியத்தின் தொடர்ச்சியாக எழுதப்பட்டு இருக்கிறது என்பதாகும். ஆகவே நாம் 11-ஆம் அதிகாரத்தை நாம் கவனமாக வாசிக்க வேண்டும். அதில் திரளான சாட்சிகள் எழுதப்பட்டிருக்கிறது. அந்த சாட்சிகளை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும்.

**பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு...**

அந்தகாலத்திலே ரோமா புரியிலே ஓட்டப்பந்தயம் மிகவும் விசேஷமாக நடைபெறும். அதைக் காண்பதற்கு ஏராளமான மக்கள் கூடி வருவார்கள். அந்த ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெறுவது மிகவும் மேன்மையாக எண்ணப்படும். ஆகவே அந்த ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ளுகிறவர்கள் ஓட்டப்பந்தயம் நடைபெறுவதற்கு பல நாட்கள் முன்பதாக மிகவும் கடினமாக பயிற்சி எடுப்பார்கள். அவர்கள் தங்கள் கால்களிலே பாரமான இரும்பு வளையங்களை அணிந்துகொண்டு ஓடி பயிற்சி எடுப்பார்கள். அந்த ஓட்டப்பந்தயம் ஆரம்பிக்கும் அந்தநாளிலே அந்த பாரமான இரும்பு வளையங்களை எடுத்துவிட்டு மிகவும் இலகுவான வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு அவர்கள் ஓடுவார்கள். பந்தய ஓட்டத்திலே ஓடுகிறவர்கள் எப்படி அதற்கு முன்பதாக பயிற்சி எடுத்துவிட்டு ஓடுகிறார்களோ அதைப் போல நாம் ஆயத்தமாக ஓட வேண்டும்.

**நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையிலே நம்மை பாரப்படுத்துகிற காரியம் என்ன?**

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையிலே தேவனுடைய சித்தத்திற்கு விரோதமான காரியங்கள் அதாவது இந்த வசனத்திற்கு புறம்பான காரியங்களை

செய்யும்போது அது நமக்கு பாரமாக இருக்கிறது. ஆகவே இந்த பாரமான யாவற்றையும் விட்டுவிட்டு இலக்கை நோக்கி ஆசையாய் ஓட வேண்டும்.

**இந்த ஓட்டம் எப்பொழுது முடிவடைகிறது ?**

இந்த வாழ்க்கை முடியும்போது இந்த ஓட்டம் முடிகிறது. பவுல் சொல்லும்போது... என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும்.... (அப். 20:24). நம்முடைய ஓட்டம் ஆரம்பித்ததிலிருந்து முடிக்கும் வரைக்கும். அந்த சந்தோஷம் நாளுக்குநாள் அதிகரிக்க வேண்டும். அது குறையக்கூடாது. நாம் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று பரிசுத்தாவி பெற்றதிலிருந்து நம்முடைய ஓட்டம் ஆரம்பிக்கிறது. இரட்சிக்கப்படாதவர்கள் இந்த ஓட்டத்திலே பங்குபெறவில்லை. அவர்கள் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கிறார்கள். நீங்கள் இரட்சிக்கப்படாமல் சபைக்குச் செல்வீர்களென்றால் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கிறீர்கள். சபைக்கு வெறுமனே வந்துபோகிற அனுபவமே காணப்படும். ஆகவே, இந்த ஓட்டத்திலே பங்கெடுப்பது மாத்திரமல்ல ஓடிவெற்றி பெறவேண்டும். சிலர் பாதி ஓட்டத்திலேயே மயங்கிவிழுந்து விடுவார்கள். சிலர் அவர்களுக்கு நியமித்த ஓட்டத்திலிருந்து வழிவிலகி போய்விடுவார்கள்.

**நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில்....**

ஓடுகிறவர்கள் அவர்களுக்கு நியமித்த அந்த பந்தயச் சாலையில் ஓட வேண்டும். அதைவிட்டு வெளியே ஓடக்கூடாது. வெளியே ஓடினால் அவர்கள் வெற்றி பெற்றாலும் அவர்களால் பந்தயப் பொருளை பெற முடியாது. அதைப்போல இந்த வேதவசனம் நமக்கு நியமித்திருக்கிற அந்த எல்லைக்குள்ளே ஓட வேண்டும். ஆகவே நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்திலே ஒவ்வொருநாளும் மிகவும் கவனமாக ஓட வேண்டும். நம்முடைய ஓட்டத்தை தடைசெய்கிற அல்லது திசை திருப்புகிற எது வந்தாலும் அதை தவிர்க்க வேண்டும் அல்லது தள்ளிவிடவேண்டும். ஆகவே உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு தடைகள், உபத்திரவங்கள், நிந்தைகள், அவமானங்கள் வந்தாலும் இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஓட வேண்டும். தேவன் உங்களை பெலப்படுத்தி ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---


# ஆண்கள் ஐக்கிய 10-வது மாநில முகாம்

**நாள் : அக்டோபர் 1, செவ்வாய்கிழமை மாலை 4 மணி முதல்**
**அக்டோபர் 2, புதன்கிழமை மாலை 4 மணி வரை**

**இடம் : ஏ.ஜி. கேம்ப் சைட், மதுரை**

கருப்பொருள்
**"திடன்கொள்"**
1 கொரி. 16:13

தேவ செய்தியாளர்கள்

**சங்கை. A.ஆபிரகாம் தாமஸ்**

**சுவி. ஃப்ரட்டி ஜோசப்**



# உங்களில் பாவமில்லாதவன் முதலாவது கல்லெறியக்கடவன்

(யோவான் 8:7)

**Rev. I. அலெக்ஸாண்டர்**

விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாத வருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் (யாக்.1:4,5). நாம் குறைவுள்ளவர்களாய் அல்ல, பூரணராய், நிறைவுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார்.

சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே நின்று வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து ஏறெடுத்த ஜெபத்தில், "பாவம் செய்யாத மனுஷன் இல்லையே" என்கிறார் (1இராஜா.8:46). சங்கீதம்19:12,13 வசனங்களை கவனியுங்கள். 1.பிழைகள்; 2.குற்றங்கள்; 3.துணிகரமான பாவங்கள்; (4).பெரும்பாதகம். பிழைகள் உடனே திருத்தப்பட வேண்டும். குற்றங்களை அறிக்கை செய்ய வேண்டும் (1யோவான் 1:9) துணிகரமான பாவங்களுக்கு விலகி இருக்க வேண்டும். இவைகளில் ஜாக்கிரதையாயிராவிட்டால் பெரும்பாதகத்திற்கு ஆளாகிவிடுவோம்.

**மற்றவர்களை குற்றவாளியாக தீர்க்காதே:** ரோமர் 2:1-ல் மற்றவர்களை குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்து சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத் தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய் என்று வாசிக்கிறோம். நாம் எளிதாக யாரையும் குற்றம் சொல்லுகிறோம், குறைசொல்லுகிறோம். பாவம் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. தேவன் பாவத்துக்கு எதிரே எப்படிப்பட்ட நிலைப்பாட்டை உடையவராய் இருந்தார். ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தபோது தோல் உடையை உண்டுபண்ணி பாவத்தை மூடினார். நீதி.28:13-ல் "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" என்று வாசிக்கிறோம். மற்றவர்களை குற்றவாளியாக தீர்க்க முற்படவேண்டாம். தேவன் மன்னிக்கிறவர். லூக்கா 17:3,4 வசனங்களை வாசித்துப் பாருங்கள். " உங்கள் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால் அவனைக் கடிந்துகொள். அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக". "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார்" (மத்.6:14).

**குடும்பங்களில் மன்னிப்பு தேவை :** அனேக குடும்பங்களில் மன்னிப்பு இல்லை. ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவில்லை. கிறிஸ்துவை தெய்வமாய் கொண்ட நமக்கு கிறிஸ்துவின் சிந்தை இல்லாமற்போவது பரிதாபமானது. "பிசாசுக்கு

இடங்கொடாமலும் இருங்கள்" என்று பவுல் கூறுகிறார் (எபே. 4:27). நல்ல சுபாவம் உள்ளவர்களாயிருந்தும் குடும்பங்களில் பிரச்சனை வருவதற்கு காரணம் பிசாசுக்கு இடம் கொடுப்பதுதான். பிசாசு கொல்லவும், அழிக்கவும், திருடவும் வருவான். சமாதானத்தை, சந்தோஷத்தை திருடுவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நம்மிடத்தில் அன்பு கூர்ந்தது போல நாமும் ஒருவரில் ஒருவர் அன்பு கூறவேண்டும். "ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" (கொலோ.3:13-15).

**எளிதில் யாரையும் குற்றப்படுத்தாதீர்கள் :** கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய் என்பது உலகப் பழமொழி. ஜாண் வெஸ்லியின் சட்டங்களில் முதல் இரண்டு சட்டங்கள் : 1.யாரைப் பற்றி தீமையையும் நம்பாதே. கேள்விப்படும் எல்லா காரியங்களிலிருந்தும் நன்மையானதை உருவாக்கப்பார். 2.யாரைப் பற்றியும் தீமையாய் பேசாதே. தீமைக்கு காரணமானவரை கண்டு பேசும்வரை உன் எண்ணங்களை வெளியிடாதே.

**நம்மைநாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.** நாம் கடைசி கால எழுப்புதலை எதிர்நோக்கியிருப்பதினால் வீண் அலுவல்களில் பிசாசு நம்மை சிக்க வைக்காதபடி ஜெபம்பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திரிப்போம். கர்த்தர் நமக்கு ஒரே இருதயத்தையும், ஒரே மனதையும் தருவாராக. இந்த தேசத்தில் இயேசுவின் நாமம் மகிமைப்பட நம்மை அர்ப்பணிப்போம். அவருடைய வருகைக்கு ஆயத்தமாய் ஜீவிப்போம். தனித்தனியாய், குடும்பம் குடும்பமாய், திருச்சபைகளாய் கிறிஸ்துவை மகிமைப்படுத்த தேவன் நமக்கு உதவிசெய்வாராக. தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்டாள் (லூக்கா 10:42). தவறுகள் சரி செய்யப்பட வேண்டும். துரிதமாய் எவர்மீதும் கல்லெறிய முற்படாமல் கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்துக்கொள்வோம்.

## 2019 கோடை விடுமுறை சீஷத்துவ பயிற்சி முகாம்கள் அறிக்கை

| | |
|---|---|
| கோடை விடுமுறை சீஷத்துவ பயிற்சி முகாம்கள் | 60 |
| பங்குபெற்ற சபைகள் | 602 |
| மொத்த மாணவர்கள் | 5646 |
| இரட்சிப்புக்கு ஒப்புக்கொடுத்தவர்கள் | 1752 |
| ஞானஸ்நானத்திற்கு தீர்மானித்தவர்கள் | 1425 |
| அபிஷேகம் பெற்றவர்கள் | 2027 |
| முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்தவர்கள் | 1449 |
| மிஷனரி ஊழியத்திற்கு அர்ப்பணித்தவர்கள் | 856 |
| பள்ளி கல்லூரிகளில் ஜெபக்குழு ஆரம்பிக்க தீர்மானித்தவர்கள் | 1611 |



# இதுவே சரியான சந்தர்ப்பம்

Rev. J. தேவதாசன் கலையரசன்
தலைமை போதகர், அம்பத்தூர் மண்டலம்

சீன தேசத்தில் கம்யூனிசம் ஆட்சியை பிடித்தவுடன் இனி சுவிசேஷ ஊழியமே செய்ய இயலாது என்ற சூழ்நிலை ஏற்பட்டது. முன்பு புத்த ஆதிக்கம் இருந்தபோது இருந்த எதிர்ப்பைவிட அதிக எதிர்ப்பு ஏற்பட்டது. மிஷனரிகள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற கட்டளையிடப்பட்டார்கள். அநேகர் கொலை செய்யப்பட்டார்கள். உள்ளூர் மிஷனரிகள் அநேகர் கைது செய்யப்பட்டார்கள். ஒவ்வொரு பட்டணத்திலும் கிறிஸ்தவ மதத்திற்கு அடையாளங்களாக இருந்த ஒருசில பெரிய ஆலயங்கள் தவிர (கதிட்ரல்) அநேகசபை தடைசெய்யப்பட்டன. வயதானவர்கள் தவிர இளைஞர்கள், சிறுவர்கள் ஆலயம் செல்வது தடுக்கப்பட்டது.

கர்த்தருடைய பெரிய இரக்கத்தினால் சில வருடங்களுக்கு முன்பு கம்யூனிச ஆட்சியே தொடர்ந்தபோதும், சந்தைப் பொருளாதாரத்திற்கு திரும்ப சீனா விரும்பியது. ஆகவே ஓரளவு சில கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, கட்டுப்பாடுடன் கூடிய மதச்சுதந்திரம் கொடுக்கப்பட்டது. இச்சூழ்நிலையில் கிறிஸ்தவ ஆராய்ச்சியாளர்கள் ஒரு ஆராய்ச்சி செய்தார்கள். ஆனால் கிறிஸ்தவம் முன்பைவிட 100 மடங்கு அதிகரித்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார்கள். அதிசயித்தார்கள்.

இது எப்படி சாத்தியமானது என்று ஆராய்ந்தார்கள். அரசாங்கம் ஏற்கெனவே அங்கீகரித்திருந்த பிராட்டஸ்டண்டு, கத்தோலிக்க சபைகள் தவிர ஏராளமான சுயாதீனமான வீட்டுச்சபைகள் புற்றீசல்கள் போல பெருகியிருந்தன. விசுவாசிகள் அனைவரும் ''தனியாள்'' ஊழிய முறையில் அந்த இருண்ட நாட்களை பயன்படுத்தியிருந்தார்கள்.

இப்போது உலகில் அதிக அளவில் இரட்சிக்கப்படுவோர்களின் பட்டியலில் சீன மக்களே முதலிடம் வகிக்கிறார்கள். அதிகளவு வேதாகமம் அச்சிடப்படுவதும் சீனமொழியில்தான்.

எனவே அனைத்துப் போதகர்களும், சபை விசுவாசிகளும் "இருள் சூழும் காலம்" வெளிப்பட ஆரம்பித்து விட்ட இக்காலத்தில் சரியான திசையில் பயணத்தைத் தொடர வேண்டும். இப்போது கோழைத்தனமாக சில வருடங்கள் ஒத்தி வைப்போம் அல்லது சமரசம் செய்துகொள்வோம் அல்லது முற்றிலும் நற்செய்தி ஊழியத்தையே நிறுத்திவிடுவோம் என்ற மனநிலைக்கு வந்துவிடக்கூடாது.

**இப்போது தான் சரியான சந்தர்ப்பம்** என கருதி தீவிரப்படுவோம். முழுமையான நற்செய்தி ஊழியத்தை சமரசமின்றி செய்வோம். ஒத்திவைப்பது, சமரசம் செய்து கொள்வது, நிறுத்திவிடுவது என்பதைவிட மாற்றுவழி கண்டுபிடித்து இன்றும் தீவிரமாக செயல்படுவோம்.

## I. தவிர்க்கப்பட வேண்டியவை :

1. **"அவ்வளவுதான்"** என்பதை சாத்தான் சொன்னால் பரவாயில்லை. நாமே சொன்னால் எப்படி? தவிர்க்கப்பட வேண்டிய மனநிலை அல்லது தவிர்க்கப்பட வேண்டிய பிரச்சாரம் எதுவெனில் அவ்வளவுதான் என்ற பதமே.
2. பாரம்பரியமாக நாம் பழகிய சில முறைகள், உலகத்திற்கு எரிச்சல் கொடுக்கும்

எனத் தெரிந்த பின்பும், அப்பாவி விசுவாசிகளை வெளியேற்றி அதையே செய்ய வைத்து பிரச்சனைகளை ஏற்படுத்துவதைத் தவிர்க்கலாம்.

3. ஏற்றுக்கொள்ளும் மக்கள் 80% மக்கள் இன்னும் இருக்க, 20% மக்களின் எதிர்ப்பையே கருத்தில்கொண்டு, அவர்களையே நினைத்து அப்படிப்பட்டவர்களைச் சந்திக்கவே திட்டமிடுவது என்ற பழைய கோட்பாடுகளை தவிர்த்துவிடுங்கள்.

4. கொட்டடித்து "வருவாய் தருணமிதுவே" என்று பாட்டுப்பாடி சொல்வதுதான் சுவிசேஷம் என்ற சிலர் கருதுகிறார்கள். சிலரது இந்த மாற்ற முடியாத பாரம்பரியமுறைகளைத் தான் மாற்றச் சொல்கிறோம். மாறாத சத்தியத்தை சமரசம் செய்துகொள்ளவோ, கோழைத்தனமாக நிறுத்திவிடவோ கேட்கவில்லை.

5. அங்கொன்றும் இங்கொன்றுமான, பிடிக்கப்பட்டார்கள். துன்புறுத்தப்பட்டார்கள் என்று வரும் WhatsApp செய்தியை பார்ப்பவர்கள், அதை "ஜெபத்திற்காக" பரப்புவதை தவிர்த்துவிடுங்கள். ஏனென்றால் அதை பதிவு செய்தவர்களே எதிர்ப்பாளர்கள்தான். மக்களின் அச்ச உணர்வை அதிகரிக்கச் செய்யும் பிசாசின் தந்திரத்திற்கு நீங்கள் உடன்படாதிருங்கள்.

## II. நாம் செய்யவேண்டியது :

1. இக்கட்டான வேளையில் பவுலைப் போல திடன்கொண்டு பிறரையும், பிறசபைகளையும் திடப்படுத்த வேண்டும் (அப். 27:21,22).

2. சபையாருக்கு தற்போதைய சவால்களைச் சொல்லி பயமுறுத்தி தளரச் செய்துவிடக்கூடாது. மாறாக அவர்கள் தன்னெழுச்சியாக கூடி ஜெபிக்க வழிநடத்த வேண்டும்(அப். 23,24).

3. வேத அடிப்படையற்ற கொளத்தூர் இயேசுவுக்கே, இந்தியா கிறிஸ்தியா போன்ற வெற்றுக் கோஷங்களை தவிர்த்து ஆக்கப்பூர்வமாக திட்டமிட்டு வாழும் இடத்தின் அர்ப்பணத்தை சபை ஏற்றுக்கொள்ள வேண்டும் (Area Commitment).

4. தனது சபையின் விசுவாசிகளுக்கு மட்டும் போதகர் என்ற மனநிலையை மாற்றி பட்டணத்திற்கே போதகர் என்ற உணர்வை போதகர் அடையவேண்டும். சபையும் கற்பிக்கப்பட வேண்டும். முறைப்படி திட்டமிட்டு பட்டணத்தை வசனத்தால், சுவிசேஷத்தால் நிரப்பவேண்டும்.

5. வீடுவீடாக செல்லும் அணுகுமுறையை அதாவது இல்லந்தோறும் நற்செய்தி என்ற அணுகுமுறையை மாற்றி, ஏற்றுக்கொள்ளும் பட்டணம், கிராமம், வீடுகள் மட்டும் இலக்கு வைக்கப்பட வேண்டும். இது சமரசமோ, கோழைத்தனமோ அல்ல இது வேதாகம அடிப்படையுள்ள ஊழியம் (லூக் 10:5,6,10).

6. போலியான நபர்கள், தங்கள் இசங்கள் (கொள்கைகள்) மேல் பற்று வைராக்கியம் கொண்டு தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிற மக்களைப் பார்க்கிறோம். ஜீவனுள்ள தெய்வத்திற்காக, பரிசுத்தமுள்ள தெய்வத்திற்காக நமது மக்களை வைராக்கியம் அடையச் செய்ய முடியாதா? முடியும். எனவே **அவ்வளவுதான்** என்ற கெட்ட வார்த்தையை வாயிலிருந்து அகற்றுவோம். **இதுவே சரியான சந்தர்ப்பம்** என்று உணர்வோம், நம்புவோம், சீனாவிடமிருந்து கற்றுக்கொள்வோம்.

குறிப்பு : இக்கட்டுரை வழக்கமான சீஷத்துவ தொடர் போதனைக்கானது அல்ல, இன்றைய சூழலுக்குப் பொருத்தமான கட்டுரை எழுத வேண்டும் என கருதி இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

### சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ




## பாஸ்டர். பெவிஸ்டன்

பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்


ஹாய், உங்கள் யாவரையும் வருக வருக என அன்போடு வரவேற்கிறேன். எல்லாரும் சுகமாயிருக்கிறீர்களா? அப்பா, அம்மா. உடன்பிறந்தவர்கள் எல்லாரும் எப்படியிருக்கிறாங்க? நான் விசாரித்ததாக மறக்காம சொல்லிருங்க. ஓக்கே.... இந்த புதிய கல்வியாண்டு உங்களுக்கு ஆசீர்வாதமாக மாற நாங்கள் ஜெபித்து வருகிறோம். நீங்களும் ஜெபத்தோடு ஆயத்தப்படுங்கள். வெற்றி உங்களுக்கே.

அண்ணா.... சும்மா பேசி பேசி டைம் வேஸ்ட் பண்ணாம கதைக்குள்ள வாங்கனு சொல்லுறது எனக்கு நல்லாவே தெரியுது. வாங்க கதைக்குள்ள போகலாம்.

பகலின் குளிர்ச்சியான வேளை. ஆசிரியர் ஒருவரை ஒரு மாணவன் வந்து சந்திக்கிறான். “ஐயா, ஒரு மாணவன் அல்லது மாணவி எப்படி இருக்க வேண்டும்?” என்று கேட்டான். அதற்கு ஆசிரியர், வெரிகுட் சூப்பரான ஒரு கேள்வி கேட்டிருக்கிறாய். இங்கே உட்காரு என கூறிக்கொண்டே இருவரும் பள்ளி வளாகத்திலிருந்த மரத்தடியில் அமர்ந்தனர். பின்பு ஆசிரியர் அந்த மாணவனிடம் “மாணவன் என்பவன், கொக்கைப்போல இருக்க வேண்டும். கோழியைப் போல இருக்க வேண்டும். உப்பைப்போல இருக்க வேண்டும். அப்புறம்... உன்னைப்போல இருக்க வேண்டும்” என்றார்.

மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை. “கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்க சார்...” என்றான். “கொக்கு, ஆற்றங்கரையில் நீண்ட நேரம் பொறுமையாக நிற்கும். மீன்கள் வந்தவுடன் விரைந்து செயல்பட்டுப் கச்சிதமாக பிடித்து விடும். அதுபோல தான், ஒரு மாணவன் சரியான வாய்ப்புக் கிடைக்கும்போது அதைப் பயன்படுத்தி, அரிய செயல்களைச் செய்ய வேண்டும்” என்றார் ஆசிரியர்.

“கோழியைப்போல இருக்க வேண்டும் என்றீர்களே, அதற்கு என்ன அர்த்தம்?” என்று மாணவன் கேட்க, ஆசிரியர் “கோழி என்ன செய்யும்? குப்பையை கிளறும். ஆனால், அந்தக் குப்பைகளை விட்டுவிட்டு தனக்கு தேவையான உணவை மட்டும் எடுத்துக்கொள்ளும். அதுபோல, மாணவர்கள் தாம் சந்திக்கும் தீமைகளைத் தூரம் தள்ளி, நன்மைகளை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்” என்றார்.

“அடுத்தது.... உப்பைப்போல இருக்க வேண்டும் என்றீர்களே...” “ஆமாம், உப்பை எந்த உணவோடு கலக்கினாலும், அது தன்னை மறைத்து பிறருக்கு சுவை கொடுக்கும். உப்பு கண்ணுக்குத் தெரியாது. அதன் சுவையை மட்டுமே உணர முடியும். அதுபோல, மாணவர்கள் இந்த இளையோர் சமுதாயத்தில் தன்னை மறைத்து அதாவது தாழ்மையுள்ள சிந்தையோடு கிறிஸ்துவின் செயல்களை பிரதிபலித்து பிறர் வாழ்வில் சுவை கொடுக்க வேண்டும்” என்றார் ஆசிரியர்.

“எல்லாம் சரி ஐயா..... உண்னைப் போல இருக்க வேண்டும் என்றீர்களே.... என்னைப் போல ஏன் பிறர் இருக்க வேண்டும்? அதற்கு என்ன அர்த்தம்?” என்று

மாணவன் கேட்டான். ‘‘மாணவன் என்பவன் தனக்குள் எழக்கூடிய சந்தேகங்களை, எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் உடனடியாக பெற்றோரிடமோ, ஆசிரியரிடமோ அல்லது தன் நலன் மேல் அக்கறை கொண்ட ஒருவரிடம் கேட்டுத் தெளிவு பெற வேண்டும். நீ இப்பொழுது அதை சரியாக செய்தாய். அதற்காகத்தான் உன்னைப்போல இருக்க வேண்டும் எனச் சொன்னேன்” என்று புன்னகைத்தார் ஆசிரியர். அந்த மாணவன் மகிழ்ச்சியுடன் அவருக்கு நன்றி கூறினான்.

அன்பான தம்பி.... தங்காய்.... கதை எப்படியிருந்தது? இந்த புதிய கல்வியாண்டில் கொக்கினை போல சரியானதை மட்டும் உள்வாங்கி கொள்ளுங்கள். உப்பினைப் போல உங்களை மறைத்து இறைச்சுவை கொடுங்கள். இறுதியாக உங்கள் மனதில் அவ்வப்போது எழும் சந்தேகங்களை, கேள்விகளை சரியான நபர்களிடத்தில் கேட்டு பதிலை, ஆலோசனையை பெற்றுக்கொள்ளுங்கள். இவைகளை சரியாய் கடைபிடித்தால் உங்கள் வாழ்வில் வெற்றி நிச்சயம், விடுதலை சத்தியம்.

“அவனுக்கு (பெசலெயேலுக்கு) ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார்” (யாத்.35:33).

இப்பகுதி குறித்த உங்களது மேலான கருத்துக்களை 97503 81784 எண்ணிற்கு SMS பண்ணுங்க. அடுத்த இதழில் விறுவிறுப்பான கதையோடு உங்களை சந்திக்கிறேன். Byeee.

---

## HOW TO PREPARE FOR THE COMING OF JESUS?

இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?

மத்தேயு 24:44; 25:10. வெளி. 19:7

1. **PURIFY** YOURSELF.
   பரிசுத்தராயிருங்கள்
   யூதா 23; 1 யோவான் 3:2,3; 2 பேதுரு 3:14; வெளி. 22:11

2. **PRAY** WITH WATCHFULNESS
   ஜெபம்பண்ண ஜாக்கிரதையாயிருங்கள்
   யூதா 20; 1 பேதுரு 4:7; லூக்கா 21:36

3. **PRACTISE** CHRISTIAN LOVE
   கிறிஸ்துவின் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்
   யூதா 21; மத்தேயு 25:32–45; 24:12; 2 தீமோ.3:3

4. **PROCLAIM** THE GOSPEL
   சுவிசேஷத்தை அறிவியுங்கள்
   யூதா 22; 2 தீமோ.4:1,2; 2 பேதுரு 3:9; மத்.24:14

5. **PERSEVERE** IN FAITH.
   விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்
   லூக்கா 18:8; யூதா 20; 1 பேதுரு 5:9; 1 தீமோ.4:1



ASSEMBLIES OF GOD

ஏ.ஜி. தமிழ்பிரதேச வாலிபர் ஊழியம் வழங்கும்

CHRIST'S AMBASSADORS · ASSEMBLIES OF GOD YOUTH

# Mega BIBLE QUIZ 2019

## மெகா வேதவினா போட்டி

போட்டிக்குரிய வேத பகுதி

**எசேக்கியேல் தீர்க்கதரிசன புஸ்தகம்**

ஜூலை 28 ஞாயிறு மாலை 3.00 மணிக்கு

பதிவு கட்டணம் ₹25

மாநில அளவில்

**முதல் பரிசு ₹ 30,000**

**இரண்டாம் பரிசு ₹ 20,000**

**மூன்றாம் பரிசு ₹ 10,000**

GIFT VOUCHER 1st Prize ₹30,000

GIFT VOUCHER 2nd Prize ₹20,000

GIFT VOUCHER 3rd Prize ₹10,000

தேர்வுகள் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு மொழிகளில் நடைபெறும்.

20 நபர்களுக்கு மேல் தேர்வு எழுத வாய்ப்புள்ள எல்லா சபைகளுமே தேர்வு மையங்கள்.

ஆங்கிலத்தில் எழுதுபவர்கள் NKJV மட்டுமே பயன்படுத்தவும்.

- ஒவ்வொரு தேர்வு மையத்திலும் முதலாவது மதிப்பெண் பெறுபவர்களுக்கு பரிசுகள் கொடுக்கப்படும் (90 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருக்கவேண்டும்)
- தமிழ் பிரதேச அளவில் சிறந்த மையத்திற்கான பரிசு உண்டு.

முன்பதிவு செய்ய வேண்டிய முகவரி

**Rev. Stephen Asir** (Treasurer)
Hallelujah AG. Church 51, Thennanjalai Road, Pondicherry.
Cell: 9677 100 110

| Rev. Lindsey I. Jones (President) | Rev. D. Solomon (Vice President) | Rev. P. Gnanasekar (Secretary) |
|---|---|---|
| Mobile: 9894136692 | Mobile: 9865279185 | Mobile: 9488888058 |

& 60 Sectional CA Leaders.



# புதிய ஆரம்பம்

## (New Beginning)

**Rev. பெகின் சாமுவேல்**

(AGCM Director)

ஆண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் உங்கள் சபைகளில் நடந்திருக்கும் விடுமுறை வேதாகம வகுப்புகளுக்குப் பிள்ளைகளை அனுப்பி வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியங்கள் மூலமாக நடைபெற்ற AGVBS ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதித்தார். சுமார் 1 லட்சத்து 80 ஆயிரம் பிள்ளைகள் இதன் மூலமாக சந்திக்கப்பட்டார்கள். இவ்வூழியங்களுக்காக ஜெபித்த உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குழந்தைகள் பள்ளியில் புதிய வகுப்பில் சேர்ந்திருக்கும் மிக முக்கியமான மாதம் இது. புது வகுப்பு, புது ஆசிரியர்கள் என்று எல்லாமே புதிதாக இருக்கும். மிக பிஸியாக பெற்றோர்கள் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். சிலர் இப்போதுதான் அப்பாடா என்று ஓய்வெடுப்பீர்கள். ஏனெனில் கடந்த விடுமுறை நாட்களில் பிள்ளைகளோடு இருந்து அவர்களைக் கவனித்து, பல இடங்களுக்கு சென்று வந்திருப்பீர்கள். எப்படியாயினும், இந்த கல்வியாண்டை கர்த்தர் உங்கள் பிள்ளைகளுக்கு ஆசீர்வதித்து தரும்படி ஜெபிக்கிறேன்.

புதிய கல்வியாண்டிற்குள் பிரவேசித்திருக்கும் பிள்ளைகளோடு பெற்றோர்களுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்து இந்த நாட்களில் பெற்றோர்கள் செய்ய வேண்டிய சில முக்கியமான காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**ஜெபத்துடன் ஆரம்பியுங்கள்** (Begin with Prayer)

பிள்ளைகள் பள்ளிக்கு செல்வதற்கு முன்னால் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வைத்து அனுப்புங்கள் அல்லது நீங்கள் அவர்கள் மீது கைகளை வைத்து ஜெபித்து அனுப்புங்கள். விசேஷமாக தேர்வு நாட்களில் உங்கள் பிள்ளைகளுக்காக நீங்கள் ஜெபித்து அனுப்பும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். எதைச் செய்வதற்கு முன்பும் ஜெபிக்க வேண்டும் என்ற பழக்கம் உருவாகட்டும்.

**உங்கள் பங்களிப்பு தேவை** (Need your Participation)

பெற்றோர்களின் பங்களிப்பு இன்றைய காலக்கட்டத்தில் பிள்ளைகளுக்கு மிக அவசியம். அது அவர்களோடு கூட நெருங்கிய பிணைப்பை உருவாக்கும். பிள்ளைகள் வீட்டுப்பாடங்களை செய்யும் போது அவர்களோடு அமர்ந்து, அவர்கள் பாடங்களை கற்றுக் கொள்ள உதவி செய்வதன் மூலம் உங்கள் பங்களிப்பை வெளிப்படுத்துங்கள். டியூசன் அனுப்புபவர்களானாலும் அவர்களின் பாடங்களை குறித்து விசாரியுங்கள். சில

பெற்றோர்களுக்கு தங்கள் பிள்ளைகள் எந்த பிரிவில் (section) படிக்கிறார்கள் என்றே தெரிவதில்லை. தேர்வு நடக்கிற நாட்கள் தெரிகிறதில்லை. ஏனெனில் தேவையான relationship பிள்ளைகளோடு இல்லை. இது சரியல்ல. ஒவ்வொரு நாளும் நீங்கள் பள்ளியில் நடக்கிற காரியங்களைக் குறித்து விசாரியுங்கள். ஏனெனில் பல மணி நேரங்கள் அவர்கள் பள்ளியில் செலவழிக்கின்றனர். ஆரம்பத்திலிருந்து சின்ன சின்ன காரியங்களை நாம் காது கொடுத்து கேட்கும் போது பின்னாட்களில் இது பல பெரிய பிரச்சனைகள் உருவாவதை தடுக்கும்.

பள்ளிகளில், கல்லூரிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் உங்கள் பிள்ளைகளின் பங்களிப்பு இருக்குமானால் தவறாமல் கலந்து கொண்டு பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள். பிள்ளைகளை பள்ளி வாகனங்களில் அனுப்புபவர்களானால் உங்களால் முடிந்த சில நாட்களில் நீங்களே drop/pick up பண்ணுவதன் மூலம் அவர்கள் உற்சாகமடைவார்கள்.

## எதிர்மறையாக பேசாதீர்கள் (Don't talk negatively)

பிள்ளைகள் முன்பாக மற்றவர்களைக் குறித்து தவறாக பேசாதீர்கள். விசேஷமாக ஆசிரியர்களையோ, பள்ளி முதல்வரையோ குறித்து எதிர்மறையான காரியங்களை பேசாதீர்கள். இது பிள்ளைகள் அவர்கள் மீது வைத்திருக்கிற நன்மதிப்பைக் கெடுக்கும். பிள்ளைகள் மனதில் தவறான எண்ணங்கள் பதிவதனால் அதிகாரமுடையவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுக்க தவறுவார்கள். அவர்களைக் குறித்த நல்ல விஷயங்களை பிள்ளைகள் முன் பாராட்டுங்கள். அது நன்மதிப்பைக் கொடுக்கும். ஒருநாளும் தவறாக பேசாதிருக்க தீர்மானியுங்கள்.

## கற்றுக்கொடுங்கள் (Teach them)

நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொடுங்கள். உதாரணமாக, பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்கவேண்டும் என்றும் அதன் முக்கியத்துவத்தையும் கற்றுக்கொடுங்கள். ஏனெனில், இந்த சிறுபிராயத்தைத் தான் character building age என்று சொல்வார்கள். இப்போது கற்றுக்கொள்ளும் காரியங்கள் பின்னாட்களில் அவர்களுடைய நடத்தையை தீர்மானிக்கும். ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவம் வாய்ந்தது. எனவே பள்ளியில் இந்தக் காரியங்களைக் கற்றுக்கொடுப்பதைக் காட்டிலும், உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற விதத்தில் நீங்களே பல நற்பண்புகளைக் கற்றுக்கொடுப்பது சிறந்தது. பள்ளியில் பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். நீங்கள் நற்பண்புகளைக் கற்றுக்கொடுங்கள். பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியில் நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி.22.6) என்று வேதம் பெற்றோர்களாகிய நமக்கு கற்பிக்கிறது. இந்த காரியங்களை இன்றிலிருந்தே செய்வோம்.

நவம்பர் மாதம் நடைபெறும் Bible Championsக்காக உங்கள் பிள்ளைகளை ஆயத்தப்படுத்த மறவாதிருங்கள். தேவன் நம்மையும், நம்முடைய பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

# PRIDE GOES BEFORE FALL

*(A study from the life of king Uzziah)*

Success can lead to downfall if success is not handled carefully. That's one of the key lessons we learn from the life of King Uzziah in 2 Chronicles 26. God lifted up Uzziah and made him the King of Judah when he was just 16 years old (2 Chronicles 26:1). "He did what was right in the eyes of the Lord, just as his father Amaziah had done He sought God during the days of Zachariah who instructed him in the fear of God" (2 Chronicles 26:5). We come to know three key reasons for the downfall of a person, from the life of king Uzziah.

1. Downfall **COMMENCES** when we become proud.

The Bible says "As long as he sought the Lord, God gave him success"(2 Chronicles 26:5). God helped him (2 Chronicles 26:7) and his fame spread as far as the border of Egypt because he had become very powerful (2 Chronicles 26:8). The Bible records, "But after Uzziah became powerful, his pride led to his downfall (2 Chronicles 26:16a). *Are we becoming proud of our achievements in life?*

2. Downfall **CONTINUES** when we are unfaithful.

King Uzziah began to think that it was because of his own abilities that he was successful. "He was unfaithful to the Lord his God, and entered the temple of the Lord to burn incense on the altar of incense" (2 Chronicles 26:16b). Burning the incense in the temple was the job of the priests but King Uzziah dared to do it. He was disloyal to God by thinking that he could do anything he wanted to do even if it was against God's instructions. *Are we unfaithful and disloyal to God by doing things we are not supposed to do?*

3.Downfall is **COMPLETE** when we are unrepentant.

Azariah the priest and 80 other courageous priests pointed out to King Uzziah his unfaithfulness to God and said, "It is not right to burn the incense to the Lord" (2 Chronicles 26:18a). They asked him to leave the sanctuary and warned him that he would not be honoured by God (2 Chronicles 26:18b). But when he despised the priests' warning and angrily reacted to them, "...leprosy broke out on his forehead" (2 Chronicles 26:19). The Bible says, "...because the Lord had afflicted him" (2 Chronicles 26:20b). *Are we stubborn at times and refuse to set right our ways inspite of God correcting and, warning us?*

- Adapted

# ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளங்கள்

1. முதிர்ச்சியுள்ள கிறிஸ்துவன் தன் எஜமானனைப் (இயேசுவை) பிரியப்படுத்தி வாழுவான். அவரைப் போல மாற முயற்சிப்பான் (லூக்கா 6:40). இயேசு பிதாவுக்கு பிரியமானவைகளை மட்டும் செய்தார் (யோவான் 8:29; கலா.1:10).
2. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் எளிதாகக் கள்ள உபதேசங்களால் வஞ்சிக்கப்பட மாட்டான் (எபே.4:11-15). அவன் சத்தியத்தை நன்கு அறிந்து, தவறான உபதேசங்களை வெறுத்து விலகி வாழுவான் (சங்.119:104, ரோமர் 12:9).
3. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் நன்மை, தீமை இன்னதென்று பகுத்தறிகிறவனாக இருப்பான் (எபி.5:11-6:1). தேவ வசனத்தை ஜாக்கிரதையாகப் படிக்கும்போது அது நம்மை தேறினவர்களாக மாற்றும். சரியான தீர்மானங்கள் எடுக்க உதவி செய்யும் (2 தீமோ.3:16).
4. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் உபத்திரத்தைக் கண்டு அஞ்சமாட்டான் (யாக்கோபு 1 : 4-5). உபத்திரவம் வரும் என்பதை அறிந்திருப்பான் (அப். 14:22). அதில் பொறுமையாயிருப்பான் (ரோமர்12:12). அதில் சோர்ந்து போக மாட்டான் (1 பேதுரு 1:6,7; 12-16).
5. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனின் இருதயம் கர்த்தருக்கு நேராகச் செம்மையாயிருக்கும் (1 நாளா. 28:9; 1 இராஜா 8:61). தன் இருதயத்தை எல்லா காவலோடும் காத்துக் கொள்ளுவான் (நீதி. 4:23). ஆவிக்குரிய காரியங்களிலும் மேலானவைகளிலும் தன் இருதயத்தை வைத்திருப்பான் (கொலோ. 3:1,2).
6. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் வளரப் பிரயாசம் எடுப்பான் (2கொரி.7:1). விசுவாசத்தில் வளர்ந்து கொண்டே இருப்பான். தேவனுக்குப் பிரியமில்லாத தகாத உறவுகள், பேச்சுக்கள், நடத்தைகளை விட்டு விலகியிருப்பான் (சங்கீதம் 1:1-3).
7. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் ஒற்றுமையோடு வாழ பிரயாசப்படுவான் (1 கொரி. 1:10). பொறாமை, வாக்குவாதம், பிரிவினை ஆகியவைகள் முதிர்ச்சியற்ற கிறிஸ்தவனின் அடையாளங்கள் (1 கொரி.3:1-3). ஆனால் அன்பு, ஐக்கியம், ஒற்றுமை முதிர்ச்சியின் அடையாளங்கள் (பிலி.2.1-4).
8. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் தன் நாவில் அடக்கம் உள்ளவனாயிருப்பான் (யாக்கோபு 3:2). வாயின் வார்த்தையில் கவனமாயிருப்பான் (யாக்கோபு 1:26). புறங்கூறுதல், மற்றவர்களைப் புண்படுத்துதல், குற்றஞ்சாட்டுதல் ஆகியவற்றில் ஈடுபடமாட்டான்.
9. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனிடம் உண்மையான. மாயமற்ற அன்பு காணப்படும் (கொலோ 3:14; ரோமர் 12:9,10; I யோவான் 2:5).
10. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் எப்பொழுதும் தேவனையே சார்ந்து வாழப் பழகியிருப்பான் (யோவான் 15:5). ஜெபம் அவனுடைய வாழ்வின் மூச்சாக காணப்படும்.
11. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனிடம் கலாத்தியர் 5:22,23 வசனங்களில் கூறப்பட்ட ஆவியின் கனிகள் அனைத்தும் காணப்படும்.
12. முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவன் ஆத்தும பாரம் உடையவனாயிருப்பான். ஆத்தும ஆதாயம் அவனுடைய இதய துடிப்பாக இருக்கும் (1 கொரி. 9:16; 2 கொரி. 5:14).

தமிழ் பிரதேச அசெம்பிளிஸ் ஆஃப் காட்
வழங்கும்




தமிழன் தொலைக்காட்சி

பாருங்கள்! பயனடையுங்கள் !!

வியாழக்கிழமை தோறும் காலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை

## போட்டி எண்-77 சரியான விடைகள் (நீதிமொழிகள்)

| | |
|---|---|
| 1. தீபம் | - மனுஷனுடைய ஆவி |
| 2. ஞானம் | - முத்து |
| 3. குணசாலியான ஸ்திரீ | - கிரீடம் |
| 4. ஜெயம் | - குதிரை |
| 5. ஜீவ ஊற்று | - நீதிமானுடைய வாய் |
| 6. வேதம் | - வெளிச்சம் |
| 7. மனரம்மியம் | - நித்திய விருந்து |
| 8. பரிதானம் | - இரத்தினம் |
| 9. முள்வேலி | - சோம்பேறியின் வழி |
| 10. சுத்தவெள்ளி | - நீதிமானுடைய நாவு |
| 11. மனமகிழ்ச்சி | - நல்ல ஔஷதம் |
| 12. கட்டளை | - விளக்கு |
| 13. குளிர்ந்த தண்ணீர் | - நற்செய்தி |
| 14. மேன்மை | - தாழ்மை |
| 15. அகந்தை | - அழிவு |
| 16. ஆழமான படுகுழி | - பரஸ்திரீயின் வாய் |
| 17. ஓயாத ஒழுக்கு | - மனைவியின் சண்டைகள் |
| 18. போதக சிட்சை | - ஜீவ வழி |
| 19. சௌந்தரியம் | - வஞ்சனையுள்ளது |
| 20. எருது | - களஞ்சியம் |
| 21. கோபம் | - நிஷ்டூரமுள்ளது |
| 22. தேன் | - வாய்க்கு இன்பம் |
| 23. பிரம்பு | - மூடன் |
| 24. மகா புத்திமான் | - நீடிய சாந்தமுள்ளவன் |
| 25. நரைமயிர் | - மகிமையான கிரீடம் |

## போட்டி எண் : 77 (சரியான விடை எழுதியவர்கள்)....

**செங்கோட்டை :** கோமதி சங்கர்; சுபா; கிரிஜா; பியூலா; கனகவல்லி; S.ஜெயா; சித்ராபிளஸ்சி; குளோரி; K.மஞ்சு; T.கலா; சாந்தி; மகேஸ்வரி; ரம்யா; ரோஸ்லின்; ராதாமணி; சுமதி; கோகிலா; கந்தையா; E.கலாராணி; S. முத்துலெட்சுமி; புஷ்பவள்ளி; மரகதம்; A.மஞ்சு; டோரா;| **ஸ்ரீவில்லிபுத்தூர் :**அனிதா; நித்யா; நாச்சியார்; பியூலா; சத்யப்பிரியா; பாஞ்சாலி; மெசி; தேவபிரியா; சத்யா; ஜெஸிக்கா ஆக்னஸ்; டெய்லிராணி; இவாஞ்சலின் ஆக்னஸ்; ரேச்சல் இவாஞ்சலின்; ஆபிரகாம்; ஞானம்; கிறிஸ்டிபிரியா; காபிரியேல்; ஹெலன் கேத்ரின்; செல்வி; மத்தேயு; கிரேஸி; ஷேரன்; மகதலேனா மரியாள்; | **மதுராந்தகம் :** நேசம்; ராணி; ஹரிணிமெர்லின்; புவனேஸ்வரி; ஆல்வின் பாண்டியன்; தேன்மொழி; ஸ்டெல்லா; மெர்ஸி பிலிப்பு;கிப்டி அருணா; சந்தியா; நர்மதா; அமலா; விஜயக்குமார்; சுந்தரி; சுனிதா; சாந்தி; | **ஆலங்குளம்** (V) : கிருபா; உமா ரோஸ்லின்; பிளாரன்ஸ்; ரெஜினா சாரு; ரோனா; பிருந்தா; லதா; தங்கம்; பிரபா; | **இறச்சகுளம்** : காயத்ரி; சகாயமேரி; கனகமணி; அமலாவேணி; ஜேஸ்மின்; ராதிகா; ஷாலினி; கலா; தர்ஷினி; | **இடப்பாடி** : ஜோசப்மேரி; சந்திரா; பிரியா; சுதா; மாலதி; எப்சிபா; லீதியாள்; ரெஜினா; ரூத்; | **திருச்சி** : கிறிஸ்டி; வேணி; ஹெலன்; சாந்தி; தங்கலதா; கிறிஸ்டி மகாலஷ்மி; மேரி சுஜாதா;| **திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்வி; ஜெசிந்தா; பிரியா; டீனாமேரி; பரிமளா; கெத்சியாள்;| **கடையநல்லூர்** : ஸ்டெல்லா; ஜெபசீதாலெட்சுமி; நளினி; ஆஷாதேவி; தங்கராஜ்; ராணி; வினோலியா; | **வந்தவாசி** : கிறிஸ்டி; மீனா; ஜெனிபர்; விஜயா; சுமதி; | **சென்னை** : சாமுவேல் பாஸ்கரன்; பியூலா; சுபா; பூஜாநேத்ரா; மெர்லின் ஹெலன் பிரிதியா;| **கிச்சிப்பாளையம்** : வினிதா; தீபா; சாராள் ஜெயரூபி; கிறிஸ்டல் ஜான்; ராணி; | **பெருங்குளம்** : பியூலா ஜோபாய்; லீதியாள்; எப்சிபா; ஜெபாராஜா; ஜெயலின் சிங்; **அந்தமான்** : விஜய்; ஸ்டெல்லாமேரி; கெத்சியாள்; ஜெயந்தி; |**ஆண்டிபட்டி** : புளோரியா; பிரைசலின் மெர்சி; மேரி; தேவபாக்கியம்; | **நாசரேத்** : தாசன்மோசஸ்; எவான்ஜலின்; பரிபூரணம்; மெர்சி; எஸ்தர்; |**பழனி** : சாந்தி; ரேஷ்மிகா; நித்தியா; பிரீத்தி; **திருக்கச்சூர்** : செலின் சாராள்; கீதா; தனலெட்சுமி; ஜெயந்தி;|**மடத்துக்குளம்** : பிரீத்தி; கிரேஸ்மேரி; முருகேசன்;| ஜீன்மெரிலின் கிருபா; | **ஓசூர்** : அன்பழகி; ஐடா கிருஷ்ணவேணி; எமிமாள்; ரித்திஹா; | **கிருஷ்ணகிரி** : ரேச்சல்; ஆனிமெர்சி; அனிதாஷைலா; அருள்மொழி; |**வில்லியனூர்** : ஷீபா; புரோனிக்கா; செல்லப்பன்; |**தேனி** : திரவியச்செல்வி; கிருபா; ராகேல்;|**முத்தையாபுரம்**:காபிரியேல் அந்தோணி; மங்களம்; ஜீவிதா; |**வெள்ளாளன்விளை** : ஞானமணி எப்சிபா; அன்பு துரைராஜ்; சரஸ்வதி; |**காளையார்கோவில்:** தனமணி; சத்யபாஸ்கர்; அருளானந்தம்; |**பேயன்விளை** : ஜாய்ஸ்மேரி; பானுமதி; பிரேமா; **மதுரை** : சுபத்ரா; ஞானம்ஜான்; ரேவதி; |**வல்லம் (தஞ்சை):** ஜமுனா; விஜி; சுலோச்சனா; |**அம்பாசமுத்திரம்** : பத்மாவதி; ஹரிலீலா; லீலா; | **வடக்குஆத்தூர்** : மகேஸ்வரி; ரூத்பாக்கியவதி; |**T.N.பாளையம்** : ஜெயபூரணி; சுஜா; |**சாத்தூர்** : கீதா வசந்தகுமாரி; சங்கீதா; |**காமராஜபுரம்** : ரவித்தா; சிந்து; |**அச்சிறுபாக்கம்** : இலக்கியா; தமிழ்ச்செல்வி; |**கொட்டாகுளம்** : ரக்ஷனா; ஜெபமேரி; **திசையன்விளை :** ராணி; ஜாய்பெல்; ஜெயசீலி;| **ராதாபுரம் (தி)** : மல்லிகா; அருள்செல்வி;| **திருக்கோயிலூர்** : லஷ்மிதேவி; டாரிஸ்; |**புதுச்சேரி** :குப்பம்மாள்; ரஞ்சிதம்; |**காட்பாடி** : பால்பிச்சமுத்து; பாத்திமா; | **திருநெல்வேலி** : பிரேமா ரூத்; சில்ரியா; |**வத்ராப்** : கிறிஸ்டி; அருள்செல்வி; |**அரும்பாக்கம்** : ஜெனிட்டா தங்கராணி; மேரி; | **புளியங்குடி** : சுந்தரி; ஞானமணி; ஜெயமணி; | **ஆறுமுகநேரி** : வெண்ணிலா எஸ்தர்; கஸ்தூரி; | **பெரியகுளம்** : கிறிஸ்டி தெபோராள்; மனோகாசிராஜ்; | **காரைக்கால்** : ராஜாமணி; உமா; | **சிட்லப்பாக்கம்** : ரெபேகாள்; தாமரைச்செல்வி; | **சேலம்** : பிமியா; சகுந்தலா; | **கோவில்பட்டி** : அகில்ஜாய்;| **தூத்துக்குடி** : பூரூசிமா; | **பள்ளிக்கரணை** : ஜெயலெட்சுமி; சார்லட் லாசரஸ்;| **வடக்குகோணம்** : மரியநேசம்; | **திருச்செந்தூர்** : பியூலா; | **தர்மபுரி:** நீனா பிரீத்தா; மாதாம்மாள்; | **புதுக்கோட்டை** : லலிதா; | **கவுந்தபாடி** : கீர்த்தனா; | **கடாட்சபுரம்** : ரேவதி;| **பல்லாவரம்(செ)** : அன்னபுஷ்பம்; | **ஆம்பூர் (வே):** ரூபி; | **சுரண்டை** : குளோரிஞானம்; **சிவகாசி** : ரூபி; | **ஏர்வாடி** : மரகதம்; | **பழையகாயல்** : எலிசபெத்; | **குற்றாலம்** : ரூத்; **திருப்பத்தூர்** : ரூத் தெய்வனாய்; | **உவரி** : சுபத்ரா; | **காதக்கிணறு** : இந்திரா; | **தாழக்குடி** : சாந்தி; | **ஈஞ்சம்பாக்கம்**; கலைச்செல்வி; | **செண்பகராமன் புதூர்** : சினேகலதா;| **காந்திபுரம்** : உஷா நந்தினி; | **புஞ்சை புளியம்பட்டி** : சங்கீதா; | **அத்திபட்டி** : தனம்;| **நெய்யூர்** : ஷீலா;| **ரங்கம்பாளையம்** : சாந்த ஷீலாராணி; | **வால்பாறை** : மொழி வனராஜ்; | **பரமன்குறிச்சி** :

செல்வி; | **வளையபட்டி** : ஜாயல்பெர்சிஸ்; | **கோரம்பள்ளம்** : சாராள்|**விருத்தாச்சலம்** : சுகிர்தா; |**சத்தியமங்கலம்** : சரஸ்வதி; |**உடுமலைபேட்டை:** தனம்; |**அல்லம்பட்டி** : தாயம்மாள்; |**கொடைக்கானல்** : சோபியா; |**இரவணசமுத்திரம்** : பியூலா; |**ஆப்பக்கூடல்** : சந்திரகுமாரி; |**ஏர்காடு** : டேவிட்; |**நம்பியூர்** : சுகந்தி;| **கொங்கத்தான்பாறை** : சந்திரா; |**கடலையூர்** ; ஆபிரகாம்; |**சோனகன்விளை** : பிளஸ்ஸி; **ராஜகீழ்ப்பாக்கம்** : மகி; |**மல்லூர்** : ஜெனிபர் நந்தினி; |**செம்பாக்கம்** : மரகதலீலா;| **பரமத்திவேலூர்:** பாமா; | **திருத்துறைப்பூண்டி** : பென்ஸி தெபோராள்; | **சின்னாளபட்டி** : சலோமி; **டோனாவூர்** : அல்போன்ஸ்; **மோகனூர்:** பீட்டர்; **இடையர்பாளையம்**:மேரிடென்சில்; **கோட்டிவாக்கம்** :பெனித்தா;|**அம்பளவானபுரம்** : நிர்மலா; | **நத்தக்காடையூர்** : பால்விக்னேஷ்; | **பொள்ளாச்சி** : அன்புகனி; | **ஏரல்வழி** : பால்கனி; | **தாம்பரம்** : விக்டர்மகேஷ்; | **பாளையங்கோட்டை** : தெரசா; | **நெய்வேலி** : கண்ணன்; | **உறையூர்** : தாமரைச்செல்வி : | **தென்னம்பாளையம்** : ரோஸ்லின்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 78

பிரசங்கி (இருப்பிடத்துடன் விடை எழுதவும்)

1. ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு .......................
2. பலியிடுவதைப் பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே .......................
3. மூடரின் பாட்டை கேட்பதிலும் ஞானியின் கடிந்து கொள்ளுதலை கேட்பது .......................
4. யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே .......................
5. நகைப்பை பார்க்கிலும் துக்கிப்பு .......................
6. ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது .......................
7. ஒருவனுடைய ஜநநநாளைப் பார்க்கிலும் மரணநாளும் .......................
8. நேர்ந்து கொண்டதை செய்யாமற் போவதைப் பார்க்கிலும் நேர்ந்து கொள்ளாதிருப்பதே .......................
9. ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே.......................
10. சுதந்தரத்தோடே ஞானம் .......................

### உன்னதப்பாட்டு (ஒப்பனையாய் சொல்லப்பட்டவை எது?)

| | | | |
|---|---|---|---|
| 1. கூந்தல் | - கர்மேல் மலை | 6. சிரசு | - தங்கமயம் |
| 2. கன்னங்கள் | - மதுரம் | 7. கழுத்து | - மாதளம் பழம் |
| 3. வாய் | - வெள்ளாட்டு மந்தை | 8. தலை | - கோதுமை அம்பாரம் |
| 4. பற்கள் | - மரணம் | 9. தொண்டை | - கோபுரம் |
| 5. வயிறு | - ஆட்டு மந்தை | 10. நேசம் | - நல்ல திராட்சை ரசம் |

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.08.2019 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**"பரிபூரண ஜீவன்"**
**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**
A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809
செல்: 88077 18002

## சேலம் மண்டல Excel முகாம்





## CA தலைவர்கள் கூடுகை – ஏலகிரி





## மிஷனரி பயணம் மற்றும் மிஷனரி கன்வென்ஷன்














Registered News Paper Regd. No. 8206 / 62

## அகில இந்திய ஏ.ஜி. மாநாடு – ஜூன் 2019




















BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165